# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:6


## சபதம்

எப்படிப் பாடுவோம்?
அந்நியனின் கால்கள்
எங்கள் நெஞ்சின் மேல்
பதியும் பொழுது
எப்படிப் பாடுவோம்?

பனிக்குளிரில் விறைத்து நிற்கும
பச்சைப் புற் சதுக்கங்கள்
மரித்தோர் சடலங்கள் மத்தியில்
எப்படிப் பாடுவோம்?

குட்டியாட்டுக் கதறல் தொனிக்கும்
பச்சைப் பாலரின் புலம்பல்
தந்திக் கம்பத்தில் அறைந்துகிடக்கும்
தனயனைத் தேடும் தாயின்
கரிய ஓலம்
கேட்கும் நாங்கள்
எப்படிப் பாடுவோம்?

மரக்கிளைகளில் தூக்கிவிட்ட
கின்னரங்களைத் தொடவேயில்லை
இது எங்கள் சபதம்;

சோகம் நிறைந்த காற்றில் மெதுவாய்
கின்னரங்கள் ஆடின
எப்படிப் பாடுவோம்?

—நிர்மலா நித்தியானந்தன்


1983 சித்திரை


கொடு தலை! கொடு உயிர்! விடுதலை தமிழ்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

## ஈழத் தமிழ்மகனே...உனது கடமை

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பகட்டத்தில் நிற்கும் காலமல்ல இது. எத்தனையோ தமிழீழ விடுதலைப் போராளிகளின் உயிர்த்தியாகங்கள்....எத்தனையோ தமிழ் மக்களின் உடமை இழப்புக்கள்....அழிப்புக்கள்....எரிப்புக்கள்....அவலங்கள்....சோகங்கள் இவற்றை எல்லாம் அத்திவாரமாக்க் கொண்டு விரைவில் உயர்ந்து நிற்கப்போகும் கோட்டையாக கண்ணீரிலும் செந்நீரிலும் உருவாகிக் கொண்டிருக்கும் காலம் இது.

இந்த தமிழீழக் கோட்டையை ஒருநாளிலோ அன்றி ஒருபொழுதிலோ உருவாக்கிவிட முடியாது. அடுக்கடுக்காய் ஒவ்வொரு கற்களாய் அடுக்கித்தான் எந்தக் கட்டிடமும் உருவாக முடியும். அதுபோலத்தான் தமிழீழக் கோட்டையும் திடமான கற்களை அடுக்கி திட்டமான முறையில் உயர்ந்துகொண்டு வருகிறது. நாளை உலகிலே வீசப்போகும் அரசியல்...பொருளாதார புயலிலும், சுழலிலும் தமிழீழக்கோட்டை தாக்குப் பிடிக்க வேண்டாமா...? இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழீழமகனும் ஆற்றவேண்டிய பங்களிப்புக்கள்....ஏராளம், ஏராளம். ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசு தான் வங்குரோத்து நிலையில் இருந்தபோதும்....தனதுநாட்டு மக்கள் பசியாலும் பட்டினியாலும் தவிக்கின்றபோதும், வரிச்சுமைகளாலும் வாழ்க்கைச் சுமைகளாலும் அவதியுறுகின்ற போதும் அவற்றை அலட்சியம்செய்து கோடிக்கணக்கானஉருபாக்களைக் கொட்டிக் குவித்து....நாட்டின் மொத்த வருமானத்தில் 35% க்கு அதிகமான பணத்திற்கு ஆயுதங்களை வாங்கியும்...தனது ஏவல்ப் படைகளுக்கு விசேட பயிற்சிகளை அளித்தும் கூட, தமிழீழ விடுதலைப் போராளிகள் ஆக்கிரமிப்பு சிங்கள அரசையும், அதன் ஏவல்ப் படைகளையும் நடுநடுங்கச் செய்து ஆட்டிப்படைத்து தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது வெறும் சிறுநெருப்பல்ல அது சுதந்திரத் தீ என்பதையுலகறியச் செய்து வருகிறார்கள். இத்தகைய இராணுவ அடிப்படையில் இயங்கும் தமிழீழ விடுதலை இயக்கங்கட்கு உன்னாலான முழு உதவிகளையும் செய்யவேண்டியது உனது முதற்கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் நம்கண்முன்னாலே அங்குல அங்குலமாய் பறிபோய்க் கொண்டிருக்கிறது எம் நிலம். தமிழீழத்தின் எல்லைகளை சிங்களக் குடியேற்றத்தின் மூலம் குறுக்க திட்டமிட்டு தமிழ்மக்களை அடித்து விரட்டி சிங்கள மக்களைக் கொண்டுவந்து குவித்து குடியேற்றிவரும் ஆக்கிரமிப்பு சிங்கள அரசின் திட்டமிட்ட நிலக்கொள்ளைக்கு எதிராக எத்தனையோ இன்னல்கட்கிடையில்....அடிகள், உதைகள் அவலங்கட்கிடையில்.. தமிழ் மண்ணைப் பாதுகாக்க மேடைகளிலே முழங்கிய எல்லைக் காவலர்களும், எல்லாம் தெரிந்தவர்களும் எங்கோ ஒழிந்துவிட்ட போதும் கூட எடுத்த பணியை முடித்தே தீருவது என்ற உறுதியுடன் தமிழ் மண்ணைக் காப்பது என்பது தாயகமீட்பிற்கு சமமானது என்ற எண்ணத்துடன் ஆயிரக்கணக்கான மலையகத் தமிழர்களை தமிழீழத்தின் எல்லைகளில் குடியேற்றி அவர்களுக்கு வாழ்வளித்துவரும் 'காந்தீயம்' போன்ற இயக்கங்களின் செயற்திட்டங்கட்கு உதவிசெய்ய வேண்டியது உனது அடுத்த கடமை ஈழத் தமிழ்மகனே!


இந்தக் கடமைகளை இலகுவாகச் செய்யக்கூடிய வாய்ப்பு வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு இருக்கிறது. ஆக்கிரமிப்பு அரசின் அடக்கு முறைக்கு அஞ்சாமல் தம்மால் முடிந்த பங்களிப்பை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆற்றும் சந்தர்ப்பம் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு கிடைத்து இருக்கின்றது. இந்தக் கடமைகளோடு மாத்திரம் நின்றுவிடாமல் வெளிநாடுகளில் வதியும் தமிழ் மக்கள் ஆங்காங்கே சிதறியிருக்கும் தமிழீழ இயக்கங்களை ஒன்றுபடுத்தி அவற்றை பலப்படுத்தி சிறந்த முறையில் செயற்படச் செய்யவேண்டும். இவையனைத்திற்கும் மேலாக தமிழினம் உலகநாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகளையும், தற்போதைய விடுதலைப் போராட்ட நிகழ்வுகளையும் அறிய முற்படவேண்டும். கதவு, பலகணி (யன்னல்) களைத் திறந்து சர்வதேசிய காற்றை சுவாசிக்கவேண்டும் விடுதலைப்-போராட்டத்தில் வெற்றியை பெறுவதற்கு எத்தகைய இன்னல்களை அனுபவிக்க வேண்டும் என்பதை, அடக்கு முறையில் கொடுமைகளை எல்லாம் சர்வதேச விடுதலைப் போராட்டங்கள்தான் எமக்கு உணர்த்தும். எனவே தமிழீழ விடுதலைப் பாதையில் கவனமாக, உறுதியாக நடந்து செல்வதற்காக தமிழ் மக்கள் தமது கவனத்தை திரைப்படங்களில் இருந்தும் மூன்றாம்தர சஞ்சிகைகளில் இருந்தும் திருப்பி வித்தியாசமான-விடயங்களை....சமூக, பொருளாதார புரட்சிகளை....அறியமுற்பட வேண்டும். ஏனெனில் முதலாளித்துவத்தின் அடக்குமுறைகளை...கம்யூனிசத்தின் பிறப்பை...கருப்பு இனமக்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை...இராணுவஅரசாங்கங்களின் கொடுமையை...பூர்சுவாக்களால் கிளறிவிடப்படும் இன, மத, வர்க்க பேதங்களை ...பற்றிய அறிவு இல்லாமல் விடுதலைப் பாதையிலே நடக்கமுயல்வது புத்திசாலித்தனமானது அல்ல. எனவே இத்தகைய விடயங்களை அறிய முற்படுவது ஈழத்தமிழ்மகனே உனது முக்கிய கடமை.

ஒவ்வொரு தமிழ்மகனும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது கடமைகளை சரியாகச் செய்தால் விரைவில் தமிழீழக் கோட்டை தரணியில் தலைநிமிர்ந்து நிற்கும்.

∴ காந்தன் ∴

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படை தோற்கின் எப்படை வெல்லும்..?



நீர்வேலி வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் குட்டிமணி, தேவன், தங்கத்துரை ஆகியோர்....

இது,

வாக்கு கேட்பதற்கு
வாக்குறுதிகள் தர வந்த கூட்டம் அல்ல.
நோக்கிலே ஒன்றாக
நோக்கம் என்றும் தமிழீழமே என நிற்கும் கூட்டம்.
தமிழினத்திற்காக
சந்தனமாய்த் தேய்ந்து....
சாம்பிராணியாய் மணக்கும்
நாம் யாவரும் வந்தனம் செய்ய வேண்டிய
வேங்கைகள் கூட்டம்.
ஆயிரம் தடவைகள் மரணதண்டனை
அத்தோடு ஆயுள் தண்டனை
தந்தாலும் தளரமாட்டோம்
தாயக மீட்பை கைவிடமாட்டோம்—என
மலர் முகத்துடன் மார்பிலே ஈழத்தைத் தாங்கும்
மாண்புமிகு இளைஞர் கூட்டம்
இவர்களும்.....இவர்கள் வழி தொடர்பவர்களும்
இருக்கும் வரை
ஈழ விடுதலைப் போராட்டம்
என்றுமே ஓயாது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

∴ பிரான்சு

## பிரான்சின் அமைச்சரவை பதவி விலகியது.


Pierre Mauroy

மார்ச் 23 ஆம் தேதி பிரான்சின் பிரதம மந்திரி பியேர் மொரூவா தமது அமைச்சரவையின் பதவிவிலகலை சனாதிபதி மித்திரானுக்கு சமர்ப்பித்தார். அதை ஏற்ற மித்திரான் மீண்டும் பிரதமராக பியேர் மொரூவாவையே நியமித்துள்ளதுடன் புதிய அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பை மொரூவாவிடம் ஒப்படைத்துள்ளார். நிதியமைச்சர் டெலர்சு மீண்டும் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவரிடம் பொருளாதாரம், வரவு-செலவுத் திட்டம் ஆகிய இலாகாக்களும் அளிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டமைச்சராக மீண்டும் கிளோட் செசனும், போக்குவரத்து அமைச்சராக மீண்டும் கம்யூனிசுக் கட்சியின் பீற்றர்மென்னும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் கைத்தொழில், விவசாயம், திட்டமிடல், வீடமைப்பு போன்ற அமைச்சுக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் பல மாற்றங்கள் ஏற்படலாமென எதிர்பார்க்கப் படுகிறது. பியேர்மொரூவா பிரதமர்ப் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என இருந்துவந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இம்மாற்றங்கள் அமைந்துள்ளன.

## உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றி.

சமீபத்தில் பிரான்சில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வலதுசாரி எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன. இருகட்டமாக நடந்தஇத் தேர்தலில் முதற் கட்டத்தில் வலதுசாரிக்கட்சிகள் 51% வாக்கினைப்பெற்று பெருவெற்றி அடைந்தபோதும் இரண்டாவதுகட்ட வாக்கெடுப்பு எக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையைக் கொடுக்கவில்லை. இருப்பினும் 16 பெரிய நகரங்களின் நிர்வாகங்களை ஆளும் சோசலிச-கம்யூனிச கூட்டணியிடமிருந்து வலதுசாரிக்கட்சிகள் கைப்பற்றியுள்ளன. அத்தோடு பாரிசு நகரின் 20 பிரிவுகளிலும் நகரமேயர் சிராக்கின்கட்சி வேட்பாளர்களே வெற்றிபெற்றுள்ளனர். இத் தேர்தல் முடிவுகள் திரு. சிராக்கின் அரசியல் நிலையை உயர்த்தியதுடன் அடுத்த சனாதிபதித் தேர்தலில் பிரதம போட்டியாளராக அவர் மாறலாம் என்ற கருத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது. அதேவேளையில் சோசலிச அரசின் 21 மாத ஆட்சிக்காலத்தில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளதை இம்முடிவுகள் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. தொழிலாளர்-பிரச்சனை அதிகரித்துவரும் வர்த்தகக்கடன் பணவீக்கம் வேலையின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பிரச்சனைகள் மக்களின் அபிப்பிராயத்தில் அரசைத் தாழ்த்தியுள்ளது. இவைகுறித்து ஆராய்ந்து கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில் சனாதிபதி மித்திரான் ஈடுபட்டுள்ளார்.

மூன்றாவது தடவை பிரெஞ்சு பிராங் பெறுமதி குறைப்பு

சோசலிச அரசு பதவியேற்ற 21 மாதங்களில் மூன்றாவது தடவையாக பிரெஞ்சு பிராங் பெறுமதி குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. இம்முறை ஐரோப்பிய நாணயங்களுடன் குறிப்பாக செருமனியின் மார்க்குடன் ஒப்பீட்டுரீதியாக 2.5% த்தால் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளது. உலக நாணயச் சந்தையில் பிரெஞ்சு பிராங் மிகப் பெறுமதி குறைந்துவரும் இந்நிலை பிரெஞ்சுப் பொருளாதாரம் சீர்குலைந்து செல்வதைக் காட்டுகிறது. அத்துடன் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 2 மில்லியனைத்தாண்டிவிட்டது. அதுமட்டுமல்ல அரசின் வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்களும் அதிகரித்துள்ளன. கட்டுப்பாட்டிலிருந்த பணவீக்கம் தற்போது கட்டுப்பாட்டை மீற ஆரம்பித்துள்ளது. பொருட்களின் விலைகள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. இப் பிரச்சனைகள் பிரான்சை பெரும் பொருளாதாரச் சுழலில் அமிழ்த்தியுள்ளது.

∴ அமெரிக்கா

எல்சல்வதோரில் அமெரிக்காவின் புதிய சதி

எல்சல்வதோரின் அரச இராணுவத்துடன் துணைநின்று ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொலைசெய்து வரும் அமெரிக்க அரசு தற்போது அம்மக்களிடையே ஊடுருவி அவர்களை மேலும் தொல்லைகட்காக்க திட்டமிட்டுள்ளது. மக்களுக்கு உதவும்படை என்றொரு இராணுவப் பிரிவொன்றை உருவாக்கி அதற்கு விசேடபயிற்சி அளித்து அதன் மூலம் கொரில்லாக்களை முறியடிக்கும் இத்தகைய திட்டத்தை ஏற்கனவே அமெரிக்கா வியட்நாமில் செயல்ப்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களைக் கொலைசெய்தது. இப்போதுசல்வதோரிலும் அத்தகைய முறையையே கையாள முற்பட்டுள்ளது. அதேவேளையில் எல்சல்வதோருக்கு மேலும் அதிக இராணுவப் பயிற்சியாளர்களை அனுப்பிவைக்க வேண்டும், இராணுவ உதவியாக 110 மில்லியன் டொலர்களும் நிதியுதவியாக 67 மில்லியன் டொலர்களும் வழங்கவேண்டும் என்ற இரீகனின் கோரிக்கைகள் அமெரிக்கக் காங்கிரசில் பெரும் எதிர்ப்புக்குள்ளாகி இருக்கின்றன. சல்வதோரில் படுதோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கும் இரீகனின் நிர்வாகம் மக்களின் எதிர்ப்புக்களை அலட்சியம்செய்து விரைவில் சல்வதோரில் தனது இராணுவத்தை குவிக்கும்என எதிர்பார்க்கப் படுகிறது.

∴ சோவியத்து யூனியன்

அமெரிக்க தூதரக அதிகாரி வெளியேற்றப் பட்டார்

சோவியத்து யூனியனிலுள்ள அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த ரிச்சாட் ஒசுபேர்ன் என்பவர் உளவு வேலைகளில் ஈடுபட்டதாகக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குற்றம் சாட்டப்பட்டு சோவியத்து அரசால் வெளியேற்றப் பட்டுள்ளார். அதேவேளையில் சோவியத்து யூனியன் துணைப்பிரதமர்களில் ஒருவராக வெளிநாட்டமைச்சர் அன்ரோ குரோமிக்கோ நியமிக்கப்பட்டுள்ளார்.

∴ மேற்கு செருமனி (WEST-GERMANY)

பொதுத் தேர்தலில் சமுக சனநாயகக் கட்சிக்கு வெற்றி



Helmut Kohl

மேற்கு செருமனியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிறீத்தவ சனநாயகக் கட்சிக் கூட்டணி 48.8% வாக்குக்களைப் பெற்று மீண்டும் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றியுள்ளது. பிரதம எதிர்க்கட்சியான சமுக சனநாயகக் கட்சியினால் 38.2% வாக்குக்களையே பெறமுடிந்தது. கிறீத்தவ சனநாயகக் கட்சிக் கூட்டணி 244 இடங்களையும், சமுக சனநாயகக்கட்சி 193 இடங்களையும் பெற்றன. மீண்டும் சனாதிபதியாக திரு. கெல்மட் கோல் பதவியேற்றுள்ளார். மேற்கு செருமனியில் அதிகரித்துவரும் வேலையில்லாப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை இவற்றுடன் மந்திரிசபைப் பதவிப் பங்கீடு தொடர்பாகவும் இவர் பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்கவேண்டி உள்ளது. இத் தேர்தலில் நியூக்கிளியர் எதிர்ப்பியக்கமாகத் திகழும் பசுமைக்கட்சி (கிறீன்) 5.6% வாக்குக்களைப் பெற்று பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் தகமையைப் பெற்றுள்ளது முக்கியவிடயமாகும்.

∴ அவுத்திரேலியா

தொழிற்கட்சிக்கு வெற்றி

அவுத்திரேலியாவில் நீண்டகாலமாக பதவியிலிருந்துவந்த மல்கம் பிரேசரின் தலைமையிலான கன்சவேர்டிக் அரசு, அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் தொழிற்கட்சியால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. புதிய பிரதமராக பொப் கவாக் பதவியேற்றுள்ளார். புதிய பிரதமர், முன்னைய அரசு நாட்டைப் பெரும் பொருளாதாரச் சிக்கலில்விட்டுச் சென்றுள்ளதாக குற்றம் சாட்டியதுடன் நாட்டின் பொருளாதார நிலையைச் சீராக்க புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இவ்வகையில் அவுத்திரேலிய டொலரின் பெறுமதி 10% தால் குறைக்கப்பட்டுள்ளது.

∴ இசரயேல் (ISRAEL)

புதிய சனாதிபதியாக கெர்சொக் தெரிவு

இசரயேலின் புதிய சனாதிபதியாக தொழிற்கட்சி வேட்பாளராகிய செயிம் கொர்சொக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரதமர் பெகினின் ஆதரவுடன் போட்டியிட்ட மென்காம் எலோன் என்பவரே இவரிடம் தோல்வியடைந்தவராவார். கெர்சொக்கின் தெரிவு பெகினுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ரீதியாக ஏற்பட்டதோல்வியாகும். பெகினின் கூட்டரசாங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் சிலர் பெகினின் வேட்பாளருக்கு எதிராக தமது வாக்குக்களை பிரயோகித்துள்ளனர். இசரயேலில் ஏற்படும் அரசியல் குழப்ப நிலைகட்கு இது ஆரம்ப சம்பவமா அமைந்துள்ளது.

∴ ஆப்கானித்தான்

பிரெஞ்சு மருத்துவர் ஆப்கானில் சிறை

ஆப்கானின் போராளிகளுடன் சிறை செய்யப்பட்ட பிரெஞ்சு மருத்துவரான பிலிப் ஒகோயாட் என்பவருக்கு உளவறிந்த குற்றம் சுமத்தப்பட்டு, 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர் மனிதாபிமான வைத்தியசேவை செய்துகொண்டிருக்கும் போதே சிறை செய்யப் பட்டதாகக் கூறப்படுகிறது. இவரை விடுதலை செய்யுமாறு பிரெஞ்சு அரசு ஆப்கானித்தான் அரசைக் கோரியுள்ளது.

∴ எகிப்து

அமைச்சர்கள்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள்

எகிப்திய அமைச்சரவையில் உள்ள மூன்று அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப் பட்டதை அடுத்து இரு அமைச்சர்கள் உடனடியாக பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். காலஞ்சென்ற சனாதிபதி சதாத்தின் சகோதரர் இசுமத் சதாத்தினால் திட்டமிடப்பட்ட ஊழலில் இம் மூவருக்கும் தொடர்பு இருப்பதாக விசேட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

∴ நிக்கரகுவா

நிக்கரகுவா–ஒண்டுராசு எல்லையில் பதட்டநிலை

ஒண்டுராசுடன் போர் மூளக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக நிக்கரகுவாவின் பாதுகாப்பு அமைச்சர் ஐ.நா. சபையின் பாதுகாப்புக் குழுவிற்கு அறிவித்துள்ளார். ஒண்டுராசு தனது எல்லையில் நிக்கரகுவாக் கிளர்ச்சியாளர்களை குவித்து வைத்திருப்பதாகவும், ஒண்டுராசின் படைகள் முகாமிட்டிருப்பதாகவும் மேலும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். கடந்த சில மாதங்களாக நிக்கரகுவாவின் புரட்சிகர சாண்டினித்திய அரசைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டு, அதன் காரணமாக நிக்கரகுவாவின் முன்னாள் கொடுங்கோலன் சொமோசாவின் கூலிப்படைகளுக்கு ஆயுதங்களும், பயிற்சிகளும் அளித்து நிக்கரகுவாவில் பதட்ட நிலையை தூண்டிவருவதும் தெரிந்ததே.

∴ எல்சல்வதோர்

கொரில்லாக்கள் ஏகாதிபத்திய தேர்தலை ஏற்க மறுப்பு.

அமெரிக்காவின் துணையுடன் சல்வதோரின் ஏகாதிபத்திய அரசு மக்களையும், உலகையும் ஏமாற்றுவதற்காக எந்தப் பொதுத் தேர்தலையும் தாம் நிராகரிப்போம் என சல்வதோரின் எப்.எம்.எல்.என்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.அதே வேளையில் நாட்டின் பலப குதிகளிலும் நடந்துவரும் போரில் தொடர்ந்து கொரில்லாக்களுக்கு வெற்றி கிட்டிவருகிறது.

∴ இந்தியா

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு-இந்தியாவிற்கு மேலும்சிறப்பு

அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்தது.இது இந்தியாவிற்கு மேலும் ஒரு சிறப்பினைக் கொடுத்துள்ளது.சிக்கல்கள் நிறைந்ததாக இருக்குமென எதிர்பார்த்த இம் மாநாடு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சாதுரியத்தால் பிரச்சனைகள் இன்றி முடிவுற்றது.அணிசேரா நாடுகளின் முக்கிய பிரச்சனைகள் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டன.

இலட்சம் தொண்டர்களைத் திரட்டி போராட சீக்கியர் திட்டம்.

பஞ்சாப்பின் தீவிரவாத சீக்கியர்கள் ஒரு இலட்சம் தொண்டர்களைத் திரட்டிப் பெரும் ஆர்ப்பாட்டத்தையும்,போராட்டத்தையும் நடத்த திட்டமிட்டுள்ளனர்.ஏப்பிரல் 4 ஆம் தேதி பஞ்சாப்பில் ஆட்சேபதினம் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.பஞ்சாப்பிற்கு கூடுதலான அதிகாரங்கள் உட்பட பல அரசியல் சமயக் - கோரிக்கைகளை முன் வைத்துத் தீவிரவாத சீக்கியர் போராட்டம் நடத்தி வருவது தெரிந்ததே.

∴ சிம்பாவே

நெகோமா பிரித்தானியாவில் அரசியல் புகலிடம் கோரினூர்.

சிம்பாவே பிரதமர் முகாபேயின் முன்னுள் போராட்ட கூட்டாளரும் தற்போதய அரசியல் எதிரியுமான நொகோமா சிம்பாவேயில் இருந்து தப்பிச்சென்று இலண்டனில் அரசியல் புகலிடம் கோரியுள்ளார். சில நாட்களுக்கு முன்னர் நொகோமாவின் ஆதரவாளர்கள் வாழும் பகுதிகளில் முகாபேயின் இராணுவம் பெரும் தேடுதல் வேட்டைகள் மேற்கொண்டதுடன்,1000 க்கு மேற்பட்ட குடிமக்களை கொலையும் செய்துள்ளது.அத்துடன் முகாபேயின் கடவுச்சீட்டை விமானநிலையத்தில் வைத்து பறித்து அவரையும் விசாரணைக்குள்ளாக்கியிருந்தது.அதையடுத்து நொகோமாவின் வீடு சோதனையிடப்பட்டு அவரது சாரதியும் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டார்.இதன் பின்னரே நொகோமா நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றூர்.நொகோமா தப்பிய பின் அவரது குடும்பத்தினரை முகாபேயின் இராணுவம் சிறை செய்துள்ளது.

*****************************************

" தரமுள்ள தமிழரின் செயலாலே
தமிழர் ஆட்சி மலர்ந்திடுமே !
தங்கத் தமிழர் ஒன்றிணைந்தே
தமிழ் ஈழ மண் மீட்ப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*****************************************

## தமிழீழக் கோரிக்கையின் பரிணாம வளர்ச்சி

∴ யாலா-சுரேன்.∴

இலங்கை இரு தேசிய இனங்களைக் கொண்டவொரு நாடு. இவ்விரு தேசிய இனங்களிற்குள்ளும் முரண்பாடுகள் வளர்ந்து தமிழ்த் தேசிய இனம் சுயமாகப் பிரிந்து தனிநாட்டை அமைப்பதற்கு முக்கியமாக இரு கருத்துக்களே முன்வைக்கப் படுகின்றன. முப்பது வருடங்களுக்கு மேலாக இவ்விரு இனங்களும் சேர்ந்துவாழ்ந்த போதிலும் எம் இனத்திற்கு சிங்கள ஆட்சியாளர் இழைத்த அநீதி காரணமாக இனியும் சேர்ந்து வாழமுடியாமை என்பது இதில் ஒன்றாகும். நாங்கள் கற்பனையில் எல்லைகள் அமைத்து ஈழத்தைக் கோரவில்லை, நாம் ஆண்ட பிரதேசத்தையே மீண்டும் பெறுவதற்குப் போராடுகின்றோம் என்பது மற்றையது ஆகும். இவ்விரண்டு கருத்துக்களுக்கு மேலாக, இவ்விரு கருத்துக்களையும் சேர்த்து பின்னிப்பிணைந்த மூன்றாவது காரணியும் இருக்கத்தான் செய்கிறது. இதுவே மக்கள் சிந்திக்க வேண்டியதும் அனுபவ ரீதியில் உண்மையானதுமான ஒரு காரணியாக இருப்பதால் நாங்கள் இதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆட்சியாழர்கள் எம்மினத்திற்கு இழைத்த கொடுமை, அத்தோடு எமக்குள்ள பாரம்பரிய பிரதேசங்கள், இவை மாத்திரம் தனியே ஈழக்கோரிக்கைக்கு வித்திடவில்லை. ஒட்டுமொத்தமாக சமூக-பொருளாதார-அரசியல் மாற்றத்தை பெறவேண்டிய காலகட்டத்திற்கு தமிழ்த் தேசியஇனம் இன்று தள்ளப்பட்டுள்ளது. இம்மாற்றமே சோசலிசத் தமிழீழம் என்கின்ற சுதந்திரமான தனிநாட்டிற்கு வழியைச் சமைக்கிறது.

அரசியல் நிலைப்பாட்டில் அகில இலங்கை ரீதியாக பாசிச அரசின் கீழ் ஈழத்தமிழ் மக்கள் படுகின்ற இன்னல்களைப் போக்கவும், தமது பாரம்பரிய பிரதேசங்களை மீளப்பெறவும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கட்சிகளான தமிழரசுக்கட்சி, அ.இ.த காங்கிரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆகிய மூன்று மாபெரும்கட்சிகளும் இணைந்து மக்களின் ஏகோபித்த ஒரு கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணியை உரவாக்கின. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் மேற்கூறிய பிரச்சனைகளுக்கு ஒரேயொரு இறுதித் தீர்வு "தமிழீழம்" எனும் தனிநாடொன்றே என்கின்ற தீர்மானம் இக்கட்சியால் நிறைவேற்றப்பட்டு 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் இத்தீர்மானம் அங்கீகரிக்கப் பட்டது. அங்கீகரிக்கப் பட்ட இத் தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தம்மை முழுமையாக அர்ப்பணிக்கப் போவதாக முப்பெரும் தலைவர்களான தந்தை செல்வா, கு.கா. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோர் மக்களுக்கு உறுதியளித்தனர். ஆயினும் நடந்தது என்ன என்பதை யதார்த்தமாக உணரக்கூடியதாக இருக்கின்றது. அ.இ.த.காங்கிரசுக் கட்சி தாமே என்று அரச சாட்சியோடு குமார் பொன்னம்பலத்தால் அவரது தந்தையின் கட்சி புனரமைக்கப் பட்டது. மலையக மக்களின் தனிப்பெருந் தலைவன் தானேஎன்று கூறிக்கொள்ளும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌ.தொண்டமான் இன்று ஆக்கிரமிப்பு அரசுடன் சங்கமமாகிவிட்டார். மீதியும் பாதியுமாக தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று அரசிற்குத் தலையாட்டியும் தாளம் போட்டும் தமிழீழப் போராட்டத்தை திசைதிருப்ப முற்படுகின்றது.

தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்ற போதும் இக்கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் தடை ஏற்பட்டதற்கு மூலகாரணம் என்ன ? இவர்களால் முன்வைக்கப்பட்ட செயற்திட்டங்கள் சிறிதளவேனும் நடைமுறைப் படுத்த முடியாது போனதேன்? சோசலிசத் தமிழீழத்தை அமைப்போம் என்று முழங்கியவர்களால் ஏனிச் சோசலிசக் கருத்தை மக்கள் மனதிலே நிலைநிறுத்த முடியாது போய்விட்டது ?

(தொடரும்)

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## அதிஉத்தமரின் இன்றைய ஆணவப் பேச்சுக்கு அன்றே சிந்தனைச்சிற்பி கொடுத்த பதில்.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "டெய்லி ரெலிகிராப்" என்கின்ற ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் அதிஉத்தமர் ஜெயவர்த்தன தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய கேள்விக்கு ஆணவத்துடன் அளித்த பதில்...

'தமிழீழக் கோரிக்கைக்கு நான் ஒருபோதும் இணங்கமாட்டேன். தமிழ்-சிங்களத் தீவிரவாதிகளிடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்த நான் முயற்சிப்பேன். எனது முயற்சி தோல்வியுறுமானால், பிரிவினை கோரும் கட்சிகளை தடை செய்ய தயங்கமாட்டேன். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நான் ஒருபோதும் அடிபணியேன்....'

இந்த ஆணவப் பேச்சுக்கு 1979ம் ஆண்டே காலஞ்சென்ற சிந்தனைச் சிற்பி அளித்த பதில்...

"விடுதலை இயக்கம் இங்கு தடை செய்யப்பட்டால் வெளிநாடொன்றில் தமிழ் ஈழத்தின் கரந்துறை அரசு (GOVT. IN EXILE) ஒன்று நிறுவப்பட்டு, சிறீலங்காவின் ஆக்கிரமிப்பையும், இனக்கொலையையும் அம்பலப்படுத்தி உலக நாடுகளின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற முயற்சிப்போம். அதே சமயம் இங்கு தடைச்சட்டத்தை பொடிப் பொடியாக்கி ஆயிரமாயிரமாக சிறைகளை நிரப்ப வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமையே சிறீலங்கா அரசு என்பதை அம்பலமாக்கியது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு.



இந்தியப் பிரதமர் இந்திராவும் கியூபா ஜனாதிபதி காஸ்ட்ரோவும்

புதுடெல்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் ஏழாவது உச்சி மாநாடு இந்திய அரசியல் தந்திரத்தின் திறமையும், பெருமையையும் உயர்த்தியுள்ளதுடன் விடுதலை இயக்கங்கட்கு சார்பானதும், முதலாளித்துவத்திற்கு எதிரானகொள்கையையும் நிறம் பார்த்துவந்த அரசியல் பேதைகளின் விழிகளை இம் மாநாட்டு முடிவுகள் பிதுங்கச் செய்துள்ளன.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், ஆபிரிக்கா விடுதலை இயக்கத்திற்கும் கிடைத்த சிறப்பிடம் இம்மாநாட்டின்ஒரு முக்கிய அம்சமென்றால் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியும் அணிசேரா மாநாட்டின் பிரதிநிதிகளின் கவனத்தைக் கவரும் வகையில் தமிழீழப் பிரச்சாரத்தையும், சிறீலங்கா சிங்கள அரசின் இனஒடுக்கல் கொள்கையை அம்பலப்படுத்தலையும் செய்தது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

தமிழீழ விடுதலைப் போராளிகளின் பிரச்சாரத்தால் ஏற்கனவே மாநாட்டில் தரம் இறங்கிப்போன சிறீலங்காவை, சனாதிபதி செயவர்த்தனா தாமும் தமது அரசும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏகபோக அடிமைகள் என்பதை நிரூபித்து அணிசேரா நாடுகளின் பெரும் அதிருப்திக்கு உள்ளாகினார். டியகோகார்சியா தீவின் மீதுள்ள மொரீசியசின் உரிமையை வலியுறுத்தி இந்தியா மாநாட்டில் கொண்டுவந்த பிரேரணைக்கு சிறீலங்கா முட்டுக்கட்டை போட்டு டியகோகார்சியா தீவுகளை தனது ஏகாதிபத்திய எசமானர்களுக்கு தாரைவார்க்க முயன்றது. சிறீலங்காவின் இந்த முட்டுக்கட்டை டியகோகார்சியா தீவின் உரிமையை மொரீசியசு அடையும் காலஎல்லையை கூட்டியுள்ளது.

இதிலே பெரும் வேடிக்கை என்னவென்றால் சமீபத்தில் நடைபெற்ற - மொரீசியசின் சுதந்திரதினத்திற்கு வாழ்த்து அனுப்பிய செயவர்த்தனா தற்போதய பிரதமர் செகநாத்தின் பெயருக்கு வாழ்த்தை அனுப்பாமல் முன்னாள் பிரதமரின் பெயருக்கே வாழ்த்தை அனுப்பியிருந்தார். மொரீசியசின் தற்போதய பிரதமர் யார் என்பதே தெரியாமல் இருக்கின்ற சிறீலங்கா சனாதிபதி டியகோகார்சியா தீவின்மீது மொரீசியசிற்கு உள்ள உரிமையைத் ஏற்றுக்கொள்ளாமல் ஏகாதிபத்திய எசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி செய்யமுயன்ற இச்செய்கை பெரும் கேலிக்குரியதாகி -து.

இதுபோலவே சிறீலங்கா சனாதிபதி இன்னுமொரு இடத்தில் மூக்குடை பட்டுக் கொண்டார். கியூபா தலைவரும் விடுதலை இயக்கங்களின் ஆதரவாளருமான பிடரல் காஸ்ரோவை இலங்கைக்கு வருகை தருமாறு செயவர்த்தன அழைப்பு விடுத்தார். அதற்கு காஸ்ரோ செயவர்த்தனவிடம் " இந்த அழைப்பை எனக்கு தருவதற்கு நீங்கள் அமெரிக்காவிடம் அனுமதி எடுக்கவேண்டி இருந்திருக்குமே " என்று சிறீலங்காவின்அடிமைத்தனத்தை கிண்டலாக கேலிசெய்தார்.

சர்வதேச அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய முடிவுகளை இம்மாநாடு எடுக்காவிட்டாலும் ஏகாதிபத்தியங்களின் அடிவருடும் அங்கத்துவநாடுகளின் குரல் ஒலி குறைக்கப்பட்டதும், விடுதலை இயக்கங்கட்கு ஆதரவான நாடுகளின் குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்ததும் இம்மாநாட்டின் சிறப்பு அம்சமாகும். இது தனது அடிமைகள் மூலம் இம் மாநாட்டைத் திசைதிருப்ப முயன்ற ஏகாதிபத்தியங்கட்கு கிடைத்த பெரும் தோல்வியாகும்.

இவையெல்லாவற்றையும் விட அடுத்துவரும் மாநாடுகளில் பாலத்தீன விடுதலை இயக்கம் போன்ற விடுதலை இயக்கங்கட்கு அளித்திருக்கும் முக்கியத்துவத்தை ஒத்த விதத்தில் தமிழீழ விடுதலை இயக்கமும் மாநாட்டில் பங்குபற்ற அநுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் நாட்டில் இருந்து ஓங்கிஒலிக்க ஆரம்பித்திருப்பது தமிழீழ விடுதலைப்-போராட்டத்தில் முக்கிய அம்சமாகும். விரைவில் இந்திய அரசும் இக் கோரிக்கையை ஓங்கிஒலிக்கச் செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

---

## ▲. வாசகர்களின் கவனத்திற்கு

1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அடையாளம் காணப்படாத ஒர் இளைஞனின் உடல் பொந்கரே (செயின் ஏ மூர்) ( ) என்னும் இடத்தில் காவலர்களால் கண்டுபிடிக்கப் பட்டது. இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும்காவலர் இது ஒரு இந்திய அல்லது இலங்கை இளைஞனின் உடலாக இருக்கலாம் என சந்தேகிக்கின்றனர். 1;65 மீற்றர் உயரமுள்ள அவ்வுடல் 20 முதல் 25 வயதிற்குட்பட்டவராய் இருக்கலாம் என கணிக்கப்படுகிறது. இது தொடர்பான விபரம் தெரிந்தவர்கள் இருந்தால் அல்லது உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் காணமல் போயிருந்தால் உடனடியாக கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரெஞ்சுக் காவலர்கள் வேண்டுகின்றனர்.

SERVICE REGIONAL DE POLICE JUDICIAIRE DE VERSAILLES,
19,AVENUE DE PAUS, 78000 VERSAILLES. TEL: 953 92 28
POSTE 15-17 ,BECKING INSPECTEUR .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைகள்... சித்திரவதைகள்... சித்திரவதை.



வண.பிதா.சிங்கராயர் ... வண.சாம்.ஜெயதிலகராஜா...டாக்டர்.ஜெயகுலராஜா.. திருமதி நிர்மலா நித்தியானந்தன்.

அருட்தந்தைகளும், அறிஞர்களும், தாய்க்குலமும் எக்காரணமும் இன்றி ஆக்கிரமிப்பு அரசினல் சிறை செய்யப்பட்டு....காவலில் வைக்கப்பட்டு....இன்று பொய்வழக்கு சோடிக்கப்பட்டு சிறீலங்கா சிங்கள நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளனர். எந்தக்குற்றச் சாட்டையும் கண்டு கலங்காத இவர்களுக்கு தடுப்புக் காவலில் சிங்கள ஆயுதப்படையினர் இழைத்துவரும் கொடுமைகளில் சில துளிகள்....

∴ <u>வண.பிதா.சிங்கராயர்</u>:- இவர் சிறைசெய்யப் பட்டபின் தொடர்ச்சியாக இரு தினங்கள் தூங்குவதற்கு அனுமதிக்கப் படவில்லை. அத்தோடு காவல் அதிகாரி 'கலகே' இவரது ஆடைகளைக் களைந்து பிதாவை நிர்வாணமாக்கி, பிதாவின் ஆணுறுப்பில் வலியை ஏற்படுத்தி சித்திரவதை செய்ததுடன் பிதாவை அடித்து மிருகத்தனமாகத் தாக்கியுமுள்ளான். அத்தோடு துப்பாக்கியை நீட்டி அவரைக் கொலைசெய்யப் போவதாக மிரட்டியதுடன், பிதாவை வாசிக்க அனுமதிக்காமலே தட்டச்சு செய்யப்பட்ட 64 பக்க வாக்குமூலமொன்றில் மிரட்டல் மூலம் அவரது கையொப்பத்தையும் வாங்கியுள்ளான். இச் சித்திரவதைகளில் உதவிக் காவல் அதிபர் புண்ணிய டீ சில்வாவும் பங்குகொண்டுள்ளான்.

∴ வண.பிதா.சின்னராசா:- இவரும் நித்திரை செய்ய விடப்படாததுடன் தொடற்சியாக மூன்று தினங்கள் கதிரையிலே இருக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டார். இவரும் ஆயுதப்படையினரால் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டதுடன் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட வாக்குமூலத்தில், மிரட்டலின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டு கையொப்பம் வாங்கப்பட்டார். வண.சிங்கராயர் மிரட்டப்பட்டதையும், கெட்ட வார்த்தைகளால் ஏசப்பட்டதையும் இவரும் கேட்டிருந்தார்.

∴ திருமதி. நிர்மலா நித்தியானந்தன்:- இவரும் படைத் தளபதி முனசிங்கா என்ற இராணுவ அதிகாரியால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். நீண்டநேரத்திற்கு இ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரும் தூங்க அனுமதிக்கப் படாததுடன்'கெலன் பெரேரா' என்ற அதிகாரி ஒருவனல் பயமுறுத்தலுக்கும்,சித்திரவதைக்கும் உள்ளாகியுள்ளார்.அத்தோடு மிகப் பிரகாசமான விளக்குகளைப் போட்டு மூளையைக் குழப்பும் சித்திரவதை முறைக்கும் இவர் உள்ளாகியுள்ளார்.

∴ திரு.நித்தியானந்தன்:- நிர்வாணமாக்கப்பட்டு கைகளாலும்,குழாய்களாலும் தாக்கப்பட்ட இவரதுவாயை வெண்சுருட்டினுல் சுட்ட ஆயுதப்படையினர் தலையில் குளிர்நீரை ஊற்றியுள்ளனர்.குடிப்பதற்கு நீரோ,உண்பதற்கு உணவோ கொடுக்காமல் விட்டனர்.இவரும் தூங்குவதற்கு அனுமதிக்கப் படாமல் தொடர்சியாக கதிரையில் அமர்த்தப் பட்டார்.ஏற்கனவே நோய்ப் பாதிப்புள்ள இவரை பலஇடங்களுக்கும் காவல் வாகனங்களில் ஏற்றிச்சென்று இராணுவத்தினர் பல துன்பங்களுக்கு உள்ளாக்கினர்.இவரைத் தாக்கி மிரட்டியதில் விசயதிலகா என்பவன் முக்கியமானவன் ஆவான்.

∴ வண.செயதிலகராசா,டாக்டர்.செயகுலராசா:- சகோதரர்களான இவர்களும் இராணுவத் தடுப்புக்காவலில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் கொடும் சித்திரவதைகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இனத்திற்காக இத்தனைகொடுமைகளையும் அனுபவிக்கும் இவர்களும் இவர்களை ஒத்த நூற்றுக்கணக்கான தமிழிளைஞர்களும் தறிகெட்ட தார்மீக ஆட்சியில் படுகின்ற இன்னல்களை இன்னும் நீ அலட்சியப்படுத்தலாமா தமிழினமே...? இன்னல்களிடையே தமிழீழத்தில் இவர்கள் தவிக்க நாம் அதை மறந்து இன்பங்களிடையே வாழ முற்படலா-மா....? பார்வையாளர்களாயி இருந்தது போதும் இனியாவது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பங்காளராய்...போராளிகளாய் வந்துவிடு தமிழினமே..!

*****************************************************

∴ " ஒரு பெரிய தேசிய இனம்,ஒரு சிறிய தேசிய இனத்தை நசுக்க விழையும் போது ஏற்படும் முரண்பாட்டால் வர்க்கப் போராட்டம் பாதிக்கப்படும்;அது சோசலிச சனநாயகத்திற்கும் சமதர்ம சமுதாய வளர்ச்சிக்கும் குந்தகமாக அமையும்."

∴"தேசிய இனங்களின் விடுதலையானது பாட்டாளிவர்க்கப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு முக்கியமானது,சரித்திர ரீதியில் தேசிய விடுதலை எழுச்சியானது பாட்டாளிவர்க்க சர்வதேசிய ஒருமைப்-பாட்டிற்கு முன்னோடியானது!!

∴"ஒரு இனத்தை அடிமைகொள்ளும் இன்னொரு இனம் தனக்குத்தானே விலங்குகளைப் பிணைத்துக் கொள்கிறது."

* கார்ல் மார்க்சு *

*****************************************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன விடுதலை

## 9. பல்குழு - உட்பகை - கொல்குறும்பு

- காழன் -

[இதுவரை உலகில் தமிழர் உள்ள நிலையை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூறினேன். தமிழர் வாழும் நாடுகளில் தமிழரின் நிலை கூறினேன். இலங்கை முழுவதுக்கும் சொந்தக்காரரான தமிழர் இன்று ஈழத்தை மட்டுமாவது கேட்டுப் பெறவேண்டியிருப்பதைக் காட்டினேன். இலங்கையின் பழங்குடிகள் தமிழரே என்பதை சான்றுகாட்டி நிறுவினேன். இன்று புதுவையில் கொண்டுவந்து நிரப்பப்படும் வட இந்தியரை அரவிந்தப் பாழியில் நிலைக்கச்செய்து இலங்கையில் ஆரியர் செய்ததைப் போலவே தமிழர்களை குடியேற்றகாரர்களாக காட்ட நடக்கின்ற இன்றைய அவலக்கூத்தை விளக்கினேன். முன் தமிழரால் நாகரீகப்படுத்தப்பட்டு, மொழியுணர்வு ஊட்டப்பட்டு தலை தூக்கிய ஆரியர் பின்னர் நம்மை வீழ்த்தவும், தாய்மொழியாம் தமிழை மாய்க்கவும் செய்த இடும்புகளை பிட்டுக் காட்டினேன். இதே நிலை இலங்கையில் சிங்கள ஆரியரால் நிகழும் கொடுமையினை விளங்க வைத்தேன். தமிழரின் பழமையைக் காட்டும் குமரிக்கண்டம் கடலுக்குள் அழிந்த வரலாற்று உண்மையைக் கூறினேன். அழிந்த குமரிக்கண்டத்தின் எஞ்சிய [illegible] நிலமே இலங்கை என்பதையும் அங்கிருந்த பழங்குடிகளான இயக்கர், இயக்கர், நாகர் போல்வார் தமிழரே என்றும் விண்டுரைத்தேன். இன்னவண்ணமே வட இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி பேசும் மக்களும் தமிழ் இனத்தவரே என்பதைச் சுட்டிக் காட்டினேன். இன்னும் வரலாற்றுக் காலத்துக்கு முன்போய் அரப்பா, முகஞ்சதாரோவில் விளங்கிய 'சிந்துவெளி நாகரிகம்' தமிழருடையதே என்று சொல், பதம் பிரித்து விரித்து வைத்தேன். இன்றுள்ள சூழ்நிலையில் தமிழ் இனத்தை அழித்தொழிப்பதிலேயே குறியாகவுள்ள இலங்கை ஆட்சி அமைப்பு உடைந்து தமிழீழம் மலரப்போவதைக் கணித்துக் கூறினேன். இன உணர்வு மொழியுணர்வால் தூண்டப்பட்டு விட்டால் அதன்பின் அவ்வின மக்கள் உரிமைபெற்றுத் தனிநாடாக அமைவதை எந்தக் காரணியத்தாலும் தடுக்க முடியாது என்று எடுத்துரைத்தேன். இன்று ஈழம் விடுதலை பெறுவதற்கு உழைக்கும் மானமறவர்களின் துன்பப்போராட்டத்தையும் அதனால் விரைவில் கனியப்போகும் தமிழீழ விடுதலையையும் உணராமல் வெறும்வாய் மெல்லும் போலிகளின் தோலுரித்துக் காட்டி அம்பலப்படுத்தினேன். நம் இன்றைய [illegible] பொருளியல் வாழ்வுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஆக்க ஆற்றல் தேடும் முயற்சிக்கும் நிலைக்களமாக இன்று உலகின் கண்களை ஈர்க்கும் தென் கண்டம் என்னும் (அண்டார்டிக்கு) தென் துருவத்தின் வளத்தையும், தொன்று தொட்டுத் தமிழருக்கு வட - தென் துருவப் பகுதிகளை நன்கு தெரிந்திருந்ததன் வரலாற்றையும் இடஞ் சுட்டிப் பொருள் சொன்னேன். இனி....]

'கேட்டுக் கிடைப்பது அல்ல விடுதலை!' இது நமக்குப் புரிகிறது. கேளாமலும் கிடைக்காது அல்லவா விடுதலை. கேட்கும் முறையை எப்படி அமைத்துக் கொள்வது? நன்முறை எனும் அறப்போரா? வன்முறை எனும் இழப்பை எதிர்கொள்ளும் மறப்போரா? இதுவே நமது கேள்வி. மறப்போருக்கு மல்லுக் கட்டி - போர்ப்பரணி பாடி - விடுதலை முரசொலித்து தமிழ் உள்ளங்களை அணிதிரட்டிய தலைவர்கள் விடுதலைப் படையை வழிநடத்திடாமல் இன்று அறங்கூறும் அமைதி முனிவர்களாக மாறிடும் போக்கு ஏற்பட்டுள்ளது. இருக்கும் தன்னாதிகாரத்திலேயே இன்னும் சற்று அதிகம் தந்தால், விடுதலையே தேவையில்லை என்பதுபோல புதுக்குரல் தருகிறார்கள் நம் இன்றைய தலைவர்கள். வரும் போரில் இதுவரை தேவையிருந்து அல்லது வீறுக - இளைஞர்கள் பலியாகின்றனரே என்ற பதைபதைப்பில் அவர்கள் மாறிவிட்டனரா? அன்றி, அறமட்டப் போராட்ட ஆர்ப்பாட்டங்களைத் தாண்டி, அரசப்பதவி எனும் அமைச்சுக் கூலியின் சுவைதரும் மயக்கத்தில் நிலைதளர்ந்துள்ளனரா? காலம்தான் இதை விளக்கவேண்டும். ஆனால் அன்று ஆரவாரக் குரல் கொடுத்தபோது அத்தலைவர்களிருந்த இளம் பருவத்திலேயே, இன்றைய இளந்தலைமுறையினர் இருப்பதை அவர்கள் புரிந்துகொள்ள மறுப்பது ஏனோ..? இதே இளம்பருவத்தில் அவர்களுக்கு `சரியாகவும்' `செய்தே தீர வேண்டியவையாகவும்' தெரிந்தவை அதே கட்டிளம்பருவத்திலிருக்கும் போராட்ட வீர இளைஞர்கட்கு இன்னும் அதிக வேகத்துடனும் ஆவேசத்துடனும் தெரியாதா? அன்றைய காலகட்டத்திற்கும், இன்றைய நடைமுறைக் காலத்திற்கும் இடையில் வீழ்ந்த தலைகள் எத்தனை? சிதைந்த குடும்பங்கள் எத்தனை? அடைந்த அரசியல் - பொருளாதார மாறுதல்கள் எத்தனை!

உலகின் எந்த ஒரு மூலையிலாவது ஏதாவது ஒரு நாடாவது தமிழனுக்கென்று இருந்தால்தான் தமிழினம் ஆரியர்களின் அழிப்புகளிலிருந்து தப்பிப் பிழைக்கமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதை நாம் அனைவருமே உணருகிறோம். இன்றைய வரலாறு தரும் கணக்கின்படி விடுதலையை நோக்கித் தள்ளப்பட்டு வரும் நாடு தமிழீழம் மட்டுமே. மற்ற இடங்களில் அந்த உணர்வுக்கு இன்னும் காலம் கனியவில்லை. தமிழீழத் [illegible] அந்தக் காலத்தைக் கனியச் செய்துவிடும். எனவே ஈழவிடுதலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் தந்து, அவ்விடுதலை வேள்விக்கு தமிழர் யாவரும் தம்மாலியன்றவரையில் துணை தர வேண்டியது இன்றியமையாததாகும். நம் கவனத்தைக் குறுகிய கட்சிப் பூசல்களிலும், கொள்கைப் பிணக்குகளிலும், மதவேறுபாடுகளிலும், குலப் பிரிவுகளிலும் அழிய விட்டு விட்டு, தமிழீழம் பிறக்கும் போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருத்தல் தகாது.

விடுதலைக்குப் போராடும் அயர்லாந்திலும், சல்வடோரிலும், போலந்திலும், ஆப்கானித்தானிலும் உள்ள நிலை நம் கண்களைத் திறப்பிக்க வேண்டும். இனவுணர்வு ஒன்றே; மொழியுணர்வால் ஒருங்கிணைக்கப்பட்டால் நாம் வெல்வது உறுதி. நம் கவனங்களைச் சிதறடித்து நம் எண்ணம் ஒருமுகப்படுத்தப்படாமல் செய்யும் வகையில் ஆளும் சிறீலங்கா அரசு பல்வகைக் 'கண்ணாமூச்சி' விளையாட்டுக்களைக் காட்டக்கூடும். கருத்தெடுப்புத் தேர்தல்; தமிழர் பகுதிகளில் சிறீலங்கா இராணுவக் கெடுபிடி; தமிழ் இளைஞர்கள் பிறநாடுகளுக்குப் புகலிடம் தேடிடுவதற்கு மறைமுக வாய்ப்பு ஏற்படுத்தித் தரல்; தமிழ்ச் செய்தித் தாள்களுக்கு வாய்ப்பூட்டு இடுதல்; இல்லாத தாக்கீது தண்டனை இருப்பது போல் காட்டி மிரட்டுதல்; இனக் கலவரங்களைத் தூண்டுதல்; மதத் தலைவர்களை மிரட்டுதல்; இப்படிப்பட்ட விளையாட்டுக்கள் யாவும் தமிழ் மக்களை நிலைகலங்கச் செய்வதற்கும், அவர்களின் போரணி ஓரணியில் திரளாமல் இயன்றவரை தேக்கம் செய்வதற்கும் சிங்கள வெறியர்கள் கடைப்பிடித்துவரும் கொள்கைகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நம் போராட்ட உணர்வை இதனாலெல்லாம் முனைமழுங்கச் செய்துவிடலாம் என்று காலங்கணித்து, கோலங்காட்டி வருகிறது சிறீலங்கா அரசு. இதே வேளையில் நம் தலைவர்களும் "மெதுநடை" போட நம்மைப் பதப்படுத்தும் புது முயற்சியில் இறங்கியுள்ளனர். அவர்களின் தளர்ச்சிக்கு மனமிரங்கலாமே தவிர, அவர்களைக் குறியாகக் கொண்டு நம் கவனத்தைத் திருப்பிவிடுவது 'பொது எதிரிக்குப் புதுவாள் கொடுப்பது' போலாகிவிடும்! இந்த முட்டுக்கட்டைகளையும் தகர்த்து நம்மவரே என்றாலும் இந்நாளில் நமக்குதவாதவர்கள் ஆதலால் அவர்களைப் புறக்கணித்து நம் நடையைத் தொடர்வதே விடுதலை மறவர்களுக்கு நல்லது. ஆட்சியின் ஏவிய அம்புகளாகச் சிலர் நமது 'வேட்டி அவிழ்க்கும்' கோடரிக் காம்பர்களாக மாறவும் கூடும். நமது கவனத்தைச் சிதறடிப்பதில் முன்னிற்கும் குருக்களைப் போலவே இவர்களும் என்னும் உண்மையைப் புரிந்து கொண்டு, நம் பாதையை விட்டு விலகாமல் இன்னும் ஓங்கிய முழுமுனைப்புடன் செல்லவேண்டும், விடுதலை உள்ளங்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MOURASSOU

MURASU 1 | AVRIL - 1983 | OLY 6


## LES TIGRES DANS LES COULOIRS DE LA COFERENCE DE NEW DELHI

" Les Tigres de la libération de l,Eelam Tamoul" ont soumis un document imprimé intitulé " les Tamouls luttent pour la liberté nationale:le Terrorisme d,Etat à Sri Lanka" à la 7ème conférence au sommet des pays Non Alignés qui a eu lieu à New Delhi(Inde). Ce document est rédigé en Tamoul et en Anglais. Il conforte également deux grandes cartes géographiques repésentant l'une " la colonisation cinghalaise de l' Eelam Tamoul" et l'autre la présence des armées de Terre, de Mer et de l'Air dans les régions Tamouls traditionnelles. Ce document retrace brièvement la passé historique et base le mémorandum sur les points suivants:

1. Dimensions de l' oppression nationale.
2. Remise en cause de l' affranchissement d'un demi-million de travailleurs.
3. Projet d'annexion des territoires Tamouls.
4. Répression dans le domaine de la lanque, de l'emploi et del'instruction.
5. Paupérisation( dépossession des biens)
6. Ementes raciales et massacre de Tamouls.
7. Campagnes non- violentes pour une Autonomie Fédérale.
8. Demande d' une sécession.
9. Résistance armée et le mouvement des Tigres.
10. Le Monde entier condamne Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tous les Campus Universitaires en Ebullition !

Plus d'une centaine d'étudiants "outstation" de L'université de Jaffna se sont réfugiés, avec leurs effets personnels, dans le campus de Jaffna. Les étudiants ,qui étaient logés chez l'habitant à Jaffna, ont déclaré qu'ils avaient pris cette décision parce que des descentes des forces de sécurité au domicile de certaines habitants, suiviès de l'arrestation et de la détention de 3 étudiants de Trincomalee les avaient terrifiés.

On assiste actuellement dans tous le pays à une vague de mécontentement des Campus Universitaires. L'Université de Colombo entame sa deuxième semaine de grêve, tandis que les étudiants de Perademiya, Kelaniya, Ruhunee et Batticaloa ont commenceé à "sécher" tous les jours lundi en signe de protestation contre la "brutalité'de la police" qui s'était déchaînée sur les grévistes des Universités de Colombo et de Sri Jayawardenepura.

DES MILITAIRES TOMBENT DANS UNE EMBUSCADE 5 BLESSéS

Cinqu Jeunes gens Ont dressé une embuscade à 2 véhicules militaires sur la ront de Kilinochchi, ont ouvert le feu, blessant cinq soldats, et se sont enfuis dans une voiture volée. Ces jeunes gens avaient auparavant parqué un camion volé près du pont(culvert) et s'étaient embusqués. Ils sont provoqué une explosion au moment où un camion militaire et une voiture blindée arrivaient à proximité du pont, et ont ouvert le feu, blessant 5 militaires. Les cinq jeunes gens-dont trois étaient en tenue de corbée avec mitaillettes et deux vêtus de parongs- avaient stoffé une voiture DAtsun et déclaré au conducteur" Nous sommes les véritables tigres, nous avons besoin de voiture", avaient obligé celui-ci, ainsi qu'un

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

direction de Mullaitivu.

UNE PERQUISITION DE L'ARMÉE PEU FRUCTUEUSE.

L'atmosphère paisible de l'Ashram Christa Seva, de chunnagam, a été sérieusement perturbée dans les premières heures du 28 Fevrier, quand en l'espace de quatre-Vingt-dix minutes, quatre différents contingents de soldats ont perquisitionné les lieux de fond en comble. L'Ashram Christa, seva est un prestigieux organisme chrétien; consacré aux ouvres charitables, et créé à Jaffna on 1939.

DES JEUNES METTENT LE FEU A DES AUTOBUS ET CRIENT(scandent) "VIVE L'EELAM"

:Deux autobus appartenant au service de transports Ceylonais ont été réduits en cendres près de Jaffna. Quatre jeunes brandissant des révolvers qu'ils avaient cachés dans leurs bottes ont ordonné aux passagers et aux conducteurs de descendre des autobus et ont versé près de quatre litres d'essence avant d'y mettre le feu. Les jeunes gens ont distribué des tracts et crié "Vive Eelam" avant de s'enfuir en bicyclettes.

L'incendie de ces deux autobus a eu lieu quelques heures après l'annonce à la radio de l'emprisonnement à vie auterme du procès du hold-up de la banque de Neerwely. Au cours de la matinée, des hommes armés avaient importûné tous les passants à Inuvil et à Chunnakam.

UN NOUVEAU M.P. POUR VADDUKKODDAI

Maître Neelan avocat fils de l'ancien ministre, M. Tiruchelvam, Q.C.; a été désigné par le T.U.L.F. pour representer la circonscription électorole de vaddukkoddai au parlement. Le Dr. Tiruchelvam qui était le réprésentant du T.U.L.F. à la commission ayant recommandé la création de conseils pour le developpement a été étudiant à l'université de Harvard et il est

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Directeur du " Marga Institute", àColombo.

UN INSPECTEUR DE LA POLICE ET SON CHAUFFEUR SONT TUES

L'Inspecteur de Police K.R.Wijewardene,dePedropoint,et son chauffeur, qui roulaient en Jeep,en vêtements civils,ont été tués à laRanteur d'un restaurant de point pedro. Leurs assaillants ont pris la fuite au volant de la jeep de la police.

UN AVOUÉ AGRESSé PAR DES MILITAIRES

UN avoué de valvettiturai,M.Kanaga Managaran a été brutalement agressé par des militaires à bord d'un camion, sans aucune provocation de sa part.

DES PROSPECCTUS EELAM AU CENTRE DE MEDIA

On rapporte que des jeunes non identifiés ont distribué des prospectus de l'Eelam au centre de Media de la conférence au sommet des pays Non-Alignés.Le centre de medio,situé à proximité de Vigyau Bhavan,accueillait,pour cette conférence,les plus de 1300 Journalistes,dont 900 venaient de pays étrangers Ceci a eu lieu en défit des l'importantes ruesures de sécurité imposées par les organisateurs de la conférence dans la région de Vigyan Bhavan.

Des prospectus avaient egalement été distribués aux divers leaders des délégations dans la hôtels où ils étaient descendus, et par la poste. La leader Tamoulnàdu Kamaraj congrés P. Nedumaran, a adréssé un appel à tous les chefs de délégations, sollicitant le statut d'obsevateurs pour les membres de l'organisation de libération de l'Eelam Tamoul à la conférence, en citant le parallile avec l'organisation pour la libération de la Palestine.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூலம் பிரெஞ்சு

(பாகம் - 14)

இந்த இதழில் Démonstratifs என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.

DEMONSTRATIFS இரு வகைப்படும் 1) Adjectifs
2) Pronoms

Adjectifs Démonstratifs

CE-(M.S) (செஒ) சொ, உ-ம்:- ce livre — இந்த புத்தகம்.

Cet-(M.S) செத், இது VOYELLES இல் தொடங்கும் ஆண்பாற் பெயர்ச் சொற்களுடன் வரும்.

உ-ம்:- cet arbre — இந்த மரம்.

Cet encrier — இந்த மைப்போத்தல்.

Cette-(F.S) - செத், உ-ம்:- Cette fleur → இந்தப்பூ

Ces -(M.P) - செ, " :- Ces livres → இந்தப்புத்தகங்கள்.

Ces -(F.P) - செ, " :- Ces fleurs → இந்தப் பூக்கள்.

Pronoms Démonstratifs

CE(neutre) இது பால்காட்டாதது அதாவது நடுநிலையானது. ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பாவிக்கலாம்.

CELUI → செலுய்யி, (M.S) இது ஆண்பால் பொருளைக் குறிப்பிட்டுக் கதைக்கும் போது பாவிக்கப்படும்.
[CE+LUI]

CELLE → செல், (F.S) ஒரு பெண்பால் பொருளைக் குறிப்பிட்டு கதைக்கும் போது பாவிக்கப்படும்.
[CE+ELLE]

CEUX → சோ (M.P)
[CE+EUX]

CELLES → செல் (F.P)
[CE+ELLES]

மேலும் இது,

Ce livre-ci → ஒரு புத்தகத்தைக் காட்டி இந்தப் புத்தகம் (தான்)

CE livre là → ஒரு புத்தகத்தைக் காட்டி அந்தப் புத்தகம் (தான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே மற்றவையையும்-

Cette fleur ci, Ces livres ci,

Cette fleur là, Ces fleurs là, . . . . .

என்றும் எழுதலாம்.

இவ்வாறே Pronom démonstratif இலும் வரும்

உ-ம்:- Ceci - இது } பால் சாராதது.
Celà - அது } (neutre)

Celui ci - இது (m.s)
" Là - அது

Celle ci - இது (f. s)
" là - அது

Ceux ci - இவைகள் (m..p)
" là - அவைகள்

CElles ci - இவைகள் (f.p)
" là - அவைகள்

குறிப்பு:- 1) Ce என்னும் பால்சாராத pronom எப்போதும் VERBE être உடன் தான் பாவிக்கப்படும்.

உ-ம்:- c'est----(s), ce sont------(p)

2) Pronom démonstratifs ஒரு possessif வசனத்தில் பாவிக்கப் படும்போது préposition DE சேர்க்கப்படும்.

உ-ம்:- le sac de Mme.Roch est rouge, celui de Sophie est bleu.

இவ்வாறே Celle de--- CEux de--- Celles de -----

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

## தமிழீழப் போராளிகளுடனான நேரடி மோதலில் சிறீலங்கா இராணுவம் தோல்வி!

கடந்த 4.03.83 வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் பரந்தனுக்கருகிலுள்ள உமையாள்புரம் காட்டுப்பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகள் குழுவொன்றிற்கும் இடையில் நேரடித் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய 15 இளைஞர்கள் தம்மை 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர். இவ்விடத்திலுள்ள பாலமொன்று முதலில் இவ்விளைஞர்களால் 'டைனமட்' வைத்து தகர்க்கப்பட்டது. இதில் 5 இளைஞர்கள் ஆயுதம் தாங்கியவர்களாயிருந்துள்ளனர். இவர்களில் மூவர் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர். டைனமட் வெடித்தவுடன் அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தினர் தமது வாகனத்திலிருந்து குதித்தபோது அங்கு இருபுறமும் பதுங்கியிருந்த வாலிபர்கள் சுட்டதாகவும் இதற்கிடையில் வேறுவாகனத்தில் வந்து சேர்ந்த இராணுவத்தினர் மீதும் இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இராணுவத்தினரும் திருப்பி சுட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. இச்சம்பவத்தில் 4 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர். இளைஞர்கள் எவ்வித இடருமின்றி தப்பிச்சென்று விட்டனர். இந்நேரடிமோதலில் தமிழீழப் போராளிகளிடம் சிறீலங்கா இராணுவம் படுதோல்வியடைந்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## புதுடெல்லி மாநாட்டில் புலிகள் தமிழீழப் பிரச்சாரம்!

புதுடெல்லியில் நடைபெற்ற ஏழாவது அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட நூற்றுக்குமேற்பட்ட தலைவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினரும் சிறீலங்கா அரசின் இனக்கொடுமையினையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தினையும் எடுத்து விளக்கும் இரு ஆங்கிலப் பிரசுரங்களை விநியோகித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தி தலைவர்களின் கவனத்தை தமிழீழப் பிரச்சனையின் பால் திருப்பியுள்ளனர். பலத்த பாதுகாப்புகளையும் மீறி இவ்வியக்கங்கள் செய்த இப்பிரச்சாரம் சிறீலங்கா அரசின் சுயரூபத்தை அம்பலமாக்க பெரிதும் உதவியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஐ.நா. மன்றத்தில் தமிழருக்கும் இடம்' இந்திய அரசிடம் தமிழர் உரிமை காப்பு மாநாடு கோரிக்கை.

'வெளிநாட்டு இந்திய வம்சாவழியினரில் பெரும்பாலோர் தமிழர்கள் இருப்பதால் தமிழக அரசின் பிரதிநிதியொருவரை ஐ.நா. மன்றத்தின் இணை உறுப்பினராக நியமிக்க வேண்டும்' என்று இந்திய அரசைக் கோரும் தீர்மானத்தையும், மலையகத் தமிழர்களின் அவலங்களைக் களைவது தொடர்பான பல முக்கிய தீர்மானங்களையும் சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற 'தமிழர் உரிமைப் பாதுகாப்பு' மாநாடு நிறைவேற்றியுள்ளது. இம்மாநாட்டில் தமிழகத்தின் முக்கிய தலைவர்களுடன் ஈழத்துப் பிரதிநிதிகள் பலரும் பங்குபற்றினர்.

## தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவம் வெறியாட்டம்!

தமிழீழத்தின் பல பகுதிகளிலும் அப்பாவிப் பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தின் வெறித்தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இத்தாக்குதல்களால் பலர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டு அவர்களது மிதிவண்டிகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. உரும்பிராயில் வைத்து சட்டத்தரணி கனக மனோகரன் இராணுவத்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். கோணேஸ்வரத்திலுள்ள பிள்ளையார் உட்பட பல தெய்வ விக்கிரகங்கள் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலி இயக்கத் தலைவரான பிரபாகரனின் சகோதரி இராணுவ மிரட்டலுக்குள்ளாகியுள்ளார். கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதலில் பலர் காயமுற்றதுடன் எண்ணற்ற மிதிவண்டிகளும் நாசமாக்கப்பட்டுள்ளன. மயிலிட்டி, திருமலை, மட்டுநகர், தலைமன்னார் போன்ற இடங்களிலும் இராணுவ வெறியாட்டங்கள் நிகழ்ந்துள்ளன. யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் திடீர் சோதனைகளை நடத்தி மக்களை பெரும் சிரமத்துக்குள்ளாக்கி வருகிறார்கள்.

## தென் மாநில முதலமைச்சர்கள் மன்றம் உருவாகியது.

தமிழ்நாடு, ஆந்திர, கர்நாடக முதலமைச்சர்கள் தங்களுக்கிடையே 'கூட்டு' ஒன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். 'தென் மாநில முதலமைச்சர்கள் மன்றம்' என்ற பெயரில் அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இதில் பாண்டிச்சேரியும் சேர்ந்து கொள்ளும். இதில் சேருமாறு கேரள அரசுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டு ஒரு சரித்திர முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கி எழுகின்றார்கள் பல்கலைக்கழக மாணவர்கள்!

ஏகாதிபத்திய சிறீலங்கா அரசின் கொடுமைகட்கும் போராட்டங்களை அடக்குமுறையும் அடக்குமுறை நிர்வாகத்திற்கும் எதிராக சிறீலங்கா, தமிழீழம் இரு நாடுகளின் பல்கலைக்கழக மாணவர்களும் பொங்கியெழுந்து போர்க்கோலம் பூண்டுள்ளனர். சமீபத்தில் சிறீலங்கா இராணுவம் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் திருமலையைச் சேர்ந்த 5 மாணவர்களையும் அவர்கள் இருந்த வீட்டின் உரிமையாளரையும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்குக்கூட அறிவிப்புக் கொடுக்காமல் கைது செய்தனர். அத்தோடு பல மாணவர்கள் வசித்துவந்த தனியார் வீடுகள் பலத்த இராணுவச் சோதனைக்கும் உள்ளாகியது. இக்கொடுமைகள் கண்டு மாணவர்கள் கொதித்தெழுந்தனர். அதுமட்டுமன்றி தனியார் வீடுகளில் வசித்துவந்த வெளியூர் மாணவர்கள் பெட்டி, படுக்கைகளுடன் பல்கலைக்கழகத்துக்கு வந்து நிர்வாகத்தை தமக்கு விடுதிவசதிகளை செய்துதரும்படி கோரினார். மாணவரின் போர்க்கோலத்தால் விரிவுரைகள் தடைப்பட்டன. அதேசமயம் மாணவர்களை இராணுவம் கைதுசெய்வதாயின் நிர்வாகத்திற்கு முன்னதாகவே அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை யாழ். மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் ஏற்க மறுத்தபோதும் மாணவரின் போர்க்கோலம் கண்டு அஞ்சிய சிறீலங்கா பாதுகாப்பமைச்சு இக்கோரிக்கையை ஏற்று செயற்படுத்துமாறு உத்தரவிட்டது. அத்தோடு கைதான திருமலை வாலிபர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதேவேளையில் சாத்வீக ரீதியில் போராட்டம் நடத்திய கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் பொலிசாரினதும், ஐ.தே.க. குண்டர்களினதும் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தின் எதிரொலியாக சகல பல்கலைக்கழக மாணவர்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்

## வடக்கில் சிறீலங்கா இராணுவத்தை குடியமர்த்த 19 புதிய திட்டங்கள். பண்டிதர் குற்றச்சாட்டு.

சிறீலங்கா அரசாங்கம் தனது இராணுவத்தை தமிழீழத்தில் நிரந்தரமாகக் குடியமர்த்தும் நோக்குடன் 19 புதிய திட்டங்களை ஆரம்பித்துள்ளதாக சிறீலங்கா பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா.பொ. இரத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார். பலாலி, மாங்குளம், மாதகல், நாகாயடி, வல்வெட்டித்துறை, பூநகரி, தொண்டமானாறு ஆகிய முகாம்களுக்காக 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதையும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுக்கோட்டையின் புதிய பா.உ. கலாநிதி நீலன் திருச்செல்வம்.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் புதிய பாராளுமன்ற உறுப்பினராக கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட சபைகளின் உருவாக்கத்திற்கும், சிறீலங்கா அரசிற்கும் கூட்டணிக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கும் இவர் பின்னணியாக இருந்து வந்தது தெரிந்ததே. இவரது நியமனம் சிறீலங்கா அரசுக்கு பெரும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்துள்ளது. சமீபகாலமாகத் தடைப்பட்ட அரசு-கூட்டணி பேச்சுவார்த்தைகள் இவரது நியமனத்தால் மீண்டும் விரைவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வைத்து இவரது வாகனமும் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு சோதனைக்குள்ளாகியது.

## வடக்கிலிருந்து ஆயுதப்படையினரை மீளப்பெறுங்கள் - வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள்!

'வட பகுதியில் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை ஆட்சியும் ஆயுதப்படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளும் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்வதுடன் வடக்கிலிருந்து அரசபடையினரை உடனடியாக திருப்பி அழைக்க வேண்டும்'- இவ்வாறு நவசமசமாசக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழீழ விடுதலைப் போராளிகள் அறுவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை.

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கில் தமிழீழ விடுதலைப் போராளிகளான தங்கத்துரை, குட்டிமணி, தேவன், சிவபாதன் மாஸ்டர், நடேசதாசன், சிறீசபாரத்தினம் (தலைமறைவாகியுள்ளவர்) ஆகியோருக்கு சிறீலங்கா நீதிமன்றம் ஆயுள்கால சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட இவ் வழக்கில் போராளிகள் கொடுமையாகச் சித்திரவதைப்படுத்தப்பட்டு அவர்களிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு வழங்கப்பட்ட சில தினங்களிலேயே தீர்ப்பை வழங்கிய நீதிபதி திரு. மூனமலே மேன்முறையீட்டு நீதியரசராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அதே வேளையில் தீர்ப்பு வழங்கப்பட்ட தினம் தமிழீழத்தில் வைத்து இ.போ.ச. வுக்கு சொந்தமான இரு பேரூந்துகள் துப்பாக்கி தரித்த [illegible] தீக்கிரையாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்கா அரசின் நட்ட ஈடு ஒருகோடி ரூபா யாழ். நூலகத்துக்கு கிடைக்கவில்லை!

1981ம் ஆண்டு சிறீலங்கா அரசுப்படையினரால் எரியூட்டப்பட்ட யாழ். நூல் நிலையப்புனரமைப்புக்கு லயனல் பெர்ணண்டோ ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் சிறீலங்கா அரசு வழங்குவதாகக் கூறிய ஒரு கோடி ரூபா இதுவரை கிடைக்கவில்லை என யாழ் மேயர் அறிவித்துள்ளார். 81இல் ஏற்பட்ட சேதங்களுக்கு சிறீலங்கா அரசு நட்டஈடு வழங்கிவிட்டது என்ற எதிர்க்கட்சித்தலைவர் அமிரின் கூற்று பொய்யாக்கப்பட்டுள்ளது. அரசு நட்டஈட்டுப் பணத்தைத் தருமென்று நம்பி யாழ். மாநகரசபை அரசின் மீது தாக்கல் செய்த வழக்கையும் மீளப்பெற்றுவிட்டது.

## கிழக்கில் பொலிசார், இராணுவம் பீதி நிலையில்..

கிழக்குப் பிராந்திய காவல்நிலைய அதிகாரி உட்பட எட்டுப் பொலிசாருக்கு பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்திருப்பதைத் தொடர்ந்து பொலிசாரும் இராணுவத்தினரும் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர். இதனால் காவல் நிலையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி பொலிசாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னத்துடன் கடிதத்தின் கீழ்ப்பகுதியில் பாடும் மீன் இலச்சினையும் பொறிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணப் புலிகள் என்பதைக் குறிக்கவே இவ்விலச்சினை பொறிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

## இந்திய மீனவர்களிடம் சிறீலங்கா கடற்படையினர் கொள்ளை!

கடலில் மீன் பிடித்து வரும் இந்திய மீனவர்களிடம் சிறீலங்கா கடற்படையினர் துப்பாக்கி முனையில் தொடர்ச்சியாக நடத்திவரும் மீன் கொள்ளையை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் அம்பலப்படுத்தியுள்ளது. 30,000/= தொடக்கம் 40,000/= பெறுமதி வாய்ந்த மீன்களை சிறீலங்கா கடற்படையினர் கொள்ளையிட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இது குறித்த தமிழக சட்டசபையிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## கரவையூர் செல்வத்தின் இல்லம் சோதனை!

கரவெட்டியிலுள்ள கத்தோலிக்க மதகுரு வண. செல்வரத்தினத்தின் (கரவையூர் செல்வம்) வீடு இரகசியப் பொலிசாரின் சோதனைக்குள்ளாகியுள்ளது. அவர் வீட்டிலில்லாதபடியால் வயது முதிர்ந்த அவரது பெற்றோர்களை விசாரணை செய்து பொலிசார் துன்பத்துக்கு உள்ளாக்கியுள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் கூற்று உண்மையாகிறது....

யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் ஊழல் மோசடிகளை பகிரங்கப்படுத்தி புலிகள் செய்த பிரச்சாரம் உண்மையாகி வருகிறது. மேற்படி நிலையத்தின் பொதுமுகாமையாளர் யேசுதாசனும், வர்த்தக முகாமையாளர் சிவலிங்கமும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர். பெரும் மோசடிகளில் இவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறதாம். சில நாட்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வூழல்கள் தொடர்பாக துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டதும் அதன்பின்னர் மேற்படி நிலையக் கிளை ஒன்று எரிந்ததும் அதில் பல கணக்கு விபரங்கள் எரிந்து விட்டதாக நிர்வாகம் சமாளித்ததும் அதையடுத்து மேற்படி சங்கத் தலைவர் ஆலாலசுந்தரத்துடன் இதுகுறித்து இளைஞர்கள் விவாதம் செய்து திருந்துமாறு எச்சரித்து அவரது காலில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் தெரிந்ததே.

## டேவிற்சனை தேடி பொலிசார் வேட்டை!

ஈழ மாணவர் பொதுமன்ற நிர்வாகச் செயலாளர் டேவிற்சனை சிறீலங்கா பொலிசார் தேடி வருகின்றனர். ஏற்கனவே பல தடவைகள் இவர் பொலிசாரினதும் இராணுவத்தினதும் விசாரணைக்கு உள்ளாகி உள்ளாகியவர். தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக மாபெரும் புரட்சிகர பாதயாத்திரை ஒன்று நடத்த திட்டமிட்டு வருகிறார் இவர்.

அதேவேளையில் கான்ஸ்டபிள் ஞானசம்பந்தன் கொலைவழக்கு விசாரணை தொடர்பாக குட்டிமணி, ஜெகன், சிறீக்குமார் ஆகியோர் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## மே மாதத்தில் மட்டுநகரில் கூட்டணியின் மாநில மாநாடு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூன்றாவது மாநில மாநாடு எதிர்வரும் மே மாதத்தில் மட்டக்களப்பில் நடைபெறும். மே, மாதம் 27, 28, 29 ஆகிய மூன்று தினங்களில் நடைபெற இருக்கும் இம்மாநாட்டுடன் கூட்டணியின் பாதை தவறுதல் அதை சரியான பாதைக்கு இட்டுச் செல்லும் பிரேரணைகளை சமர்ப்பிக்குமாறு கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

# வேள்வியில் பலஸ்தீனம்

* கிறிஸ்ரி *

## எருசலேம் முற்றுகை.

"என்னிறைவனின் பாடலை மாற்றான் மண்ணில் எப்படிப் பாடுவேன்
உன்னை மறந்தால், ஓ எருசலமே என்வலதுகை தன் செயலிழக்க
ட்டும்
உன்னை நினையாதிருந்தால் என்நா மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்
ளட்டும்
என்னுயர் இன்பங்களின் மேலாக, ஓ எருசலமே உன்னை நான்நே
சிக்கிறேன் "

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாடற்று நாடோடிகளாக அலைந்த யூதர்கள் தாமிழந்த பழைய இராச்சியத்தின் தலைநகர் பற்றிப் பாடுகின்ற பாட்டு இது. அமைதிநகர் என்று கருத்துப்படும் எருசலேம் யூத, கிறீத்த, இசுலாம் ஆகிய மதங்களின் பரிசுத்ததலம். யூதர்களின் பழைய தேவாலயம், கிறீத்து நடமாடிய நிலங்கள், முகமதுநபி வானுலகேகிய கற்பாறை—இம் மும்மதங்களின் புண்ணிய பூமியாக எருசலேம் விளங்கியது. எனவேதான் 'பலத்தீனத்தை யூத, அரபுப் பிரிவுகளாகப்பிரிக்கும் ஐ. நா. சபைத் தீர்மானம்—எருசலேமை சர்வதேச நகராக வைத்திருக்க பரிந்துரைத்தது. எருசலேம் பழைய நகர், புதியநகர் என இரு பிரிவுகளாக இருந்தது. புதியநகரில் யூதர்களும், பழையநகரில் அரபுக்களும் பெரும்பான்மையாக இருந்தனர். முழு எருசலேமிலும் யூதர்களின் எண்ணிக்கை முழுச்சனத்தொகையில் 2/3 பங்காகும். முழுப்பலத்தீனத்திலும் இருந்த யூதர்களில் 1/6 பகுதியினர் எருசலேமில் இருந்தனர். எனவே எருசலேம் யூதர்களுக்கு மிகமுக்கிய கேந்திர இடமாக விளங்கியது. எருசலேம் வீழ்ச்சியுற்றால் முழுப்பலத்தீனமும் பறிபோகும் நிலை இருந்தது. எருசலேமுக்கு உணவுப்பொருட்களைக் கொண்டு வரும் வாகனங்களைத் தாக்கி அழிப்பதன் மூலம்—எருசலேமைத் தனிமைப்படுத்தி—யூதரை உணவின்றிப் பட்டினியால் அடிபணிய வைப்பதன் மூலம்—யூதரின் தனிநாடு பெறும் முயற்சியை சிதறடிக்க எண்ணினர் அரபுக்கள்.

தெல்அவிவ் போன்ற மெதித்தரேனிய கடலை அண்டியிருந்த நகர்களில் இருந்துதான், உள்பகுதியில் இருந்த எருசலேமுக்கு உணவு, உடை, எரிபொருட்கள் ஆகிய சகலபொருட்களும் வந்தன. வரும்வழி அரபுக்கிராமங்களால் சூழ்ப்பட்டு இருந்தது. கிராமமக்களைத் திரட்டி, பொருட்களைச் சுமந்துவரும் வாகனங்களை அழித்துச் சூறையாடுவதன் மூலம் எருசலேம் முற்றுகையை வெற்றிகரமாக செயற்படுத்த எண்ணினர் அரபுக்கள். பாப்-எல்-வாட் என்ற இடத்தில் இருந்து எருசலேம் 16 மைல் தூரத்தில் இருந்தது. இப்பகுதியில்த்தான் அரபுத்தாக்குதல்கள் நடந்தன. கிராமப் பாதைகளில் குண்டுகளை அமைத்து, நிலக்கண்ணி வெடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் புதைத்து அரபுக்கள் ஒளிந்திருப்பர். உணவு வாகனங்கள் கண்ணி வெடிகளில் சிக்கித் சிதறுண்டு பாதைதடைப்பட்டவுடன் அரபுக்கள் தம்து தாக்குதல்களைத் தொடங்குவர். அத்தாக்குதல்களினால் பல உணவுவண்டிகளும், அதற்கு காவலாக வந்தோரும் ஏராளமாக அழிந்தனர்.

எருசலேம் முற்றுகையால் எருசலேமில் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்க யூத முகாமையகம் யோசேப்பு என்பவரை நியமித்தது. முதல் வேலையாக அவர் நகரிலிருந்த உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்படும் களஞ்சிய அறைகளைப் பொறுப்பேற்றார். அங்கிருந்த உணவுப் பொருட்களின் நிலைபற்றி முதலில் பட்டியல் ஒன்று தயாரித்தார். எருசலேமில் உள்ள யூதமக்களுக்கு பங்கீட்டுமுறை மூலம் உணவு வழங்க ஏற்பாடாகியது. அனைத்து யூதவீடுகளிலும் சிறு சிறு தோட்டங்கள் உருவாகின. எருசலேமுக்கு நீர் வழங்கிய நீர்த்தேக்கங்கள் அரபுப் பகுதிகளில் இருந்தன. பிரித்தானிய அரசு வெளியேறும்போது அந்நீர்த்தேக்கங்களை அரபுக்கள் மூடிவிடலாம் என அறிந்த யூத முகாமையகம், ஒவ்வொரு யூதப்பகுதிகளிலும் இருந்த தொட்டிகளிலும் நீர் சேமிக்கப்பட்டு அதுவும் பங்கீட்டு முறைமூலம் யூதமக்களுக்கு வழங்கப்பட்டது. உணவுநிலை நாளுக்குநாள் சீர்குலைய எருசலேமில் இருந்த பெண்களையும், குழந்தைகளையும் கடற்கரை நகர்களுக்கு அனுப்பும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் எருசலேமைக் காப்பாற்றும் போராட்டத்தில் உதவியற்ற மனைவி பிள்ளைகள் அங்கிருப்பது ஒரு யூதப்போர் வீரனுக்கு கூடிய வீர உணர்ச்சியைக் கொடுக்கும் என்ற எண்ணத்தில் அவ்வாலோசனை கைவிடப்பட்டது.

இசரயேலின் பிர்தம்ராக் பின்னர் வந்த கோல்டா மேயரின்மகள் அரபுக்களால் சூழப்பட்ட பழைய எருசலேமில் இருந்தாள். அவளிருந்த கிராமம் வரப்போகும் யுத்தத்தில் எகிப்தியப் படைகள் ஊடுருவப்போகும் பகுதியில் இருந்ததால்-அக் கிராமம் அழிவுறப்போவது திண்ணம், எனவே வேறு பாதுகாப்பான பகுதிக்கு மகளை அனுப்பலாமே என்று ஒருவர் அறிவுரை வழங்கினர். அதற்கு கோல்டா மேயர் " என்னைப்போல் எல்லாத் தாய்மாரும் எண்ணினால், பழைய எருசலேமுக்காக போராடுவது யார் ? " என்று கூறி அனுப்ப மறுத்து விட்டார். அரபுக்களின் எருசலேம் முற்றுகை இறுகிவந்தது. யூதமக்களுக்கு வழங்கப்பட்ட ஒருநாள் பங்கீடு வரவரக் குறைந்து ஆளுக்கு இரண்டுதுண்டு பாண், மூன்று அவுன்சு கருவாடு, ஒன்றரை அவுன்சு வெண்நெய் என்ற அளவில் இறங்கியது. நிலைமை பயங்கர வடிவமெடுத்து மோசமடைந்து சென்றது. இதைச் சமாளிப்பதற்கு, உணவு வாகனங்கள் வரும்வழியில் தாக்குகின்ற கிராமங்களில் உள்ள அரபுமக்களை, அவ்விடங்களில் இருந்து விரட்டிக் கலைப்பதன் மூலம் எருசலேம் முற்றுகையை முறியடிக்க யூதத் தலைவர்கள் திட்டம் தீட்டினர்.

(வளரும்)

---

# சிறீலங்காவில் அத்தியாவசியப் பொருட்கள் யாவும் விலையேறின · மக்கள் பெரும் தவிப்பு அரசாங்கமோ ஆயுதக் கொள்வனவில் தீவிரம்!




வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் பெரும்தொகைப் பணத்தையும், வாங்கிய கடனுக்கான வட்டி செலுத்தும் சுமையையும் மக்களின் தலையில் சுமத்திவிட்டுத் தான் ஆயுதக் கொள்வனவில் மூழ்கியுள்ளது சிறீலங்கா அரசு. உலகின் பிச்சைக்கார நாடாக சிறீலங்காவை மாற்றிய ஐ.தே.க. அரசு தனது மக்களையும் இன்று உணவிற்கு அலைய விட்டுள்ளது. சீறீலங்கா பொருளாதார சீர்கேட்டில் சில துளிகள் இதோ.......

* உலகில் ஒரு குடிமகனின் சராசரி தலா வருமானம் 2100 டொலர்கள். ஆனால் இலங்கையில் 210 டொலர்கள் தான் ஒரு இலங்கைக் குடிமகனின் தலா வருமானம்.
* உலகிலேயே மிக அதிகமாக தலைக்கு 40 டொலர்கள் என்ற வீதம் 1982 ஆம் ஆண்டு அபிவிருத்தி நிதியினை சர்வதேசநாணய நிதியில் இருந்து இலங்கை பெற்றுள்ளது.
* உலக சந்தையில் பெற்றோலின் விலை குறைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இலங்கையில் கூட்டப்பட்டிருக்கிறது.
* 1982 ஆம் ஆண்டு மட்டும் இலங்கை அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவியாக 13 மில்லியன் டொலர்களையும், இராணுவக்கடனாக 42 மில்லியன் டொலர்களையும் பெற்றுள்ளது. எந்தவிதப்போரபாயமும் இல்லாத இந்நிலையில் இந்த இராணுவத் தளபாடங்கள் தமிழ் மக்களையும், தொழிலாளர் வர்க்கத்தையும் அடக்குவதற்காகவே என்பதை விளக்கத் தேவையில்லை.
* தன்னுடைய இறக்குமதிச் செலவீட்டில் 35% க்கு மேற்ப்பட்டதொகையை ஆயுதக் கொள்வனவிற்கு செலவிடும் சிறீலங்கா சிங்கள அரசின் பாதுகாப்பு அமைச்சிற்கு 1970 இல் 5 கோடி உரூபா ஒதுக்கப்பட்டது. 1978 இல் இது 54 கோடி உரூபா ஆகியது. 1983 இல் இது 129 கோடி உரூபாவாக உயர்ந்துள்ளது.

வாசகர்களே! இவ் இதழில் உள்ள பிரெஞ்சு செய்திகளை உங்கள் பிரெஞ்சு நண்பர்களுக்கு விளக்கிக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிசேரா நாடுகளின் ஏழாவது உச்சி மாநாட்டில் தமிழீழ விடுதலை புலிகளால் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தின் சாராம்சம்...

"Tamils fight for national freedom: state terrorism in SriLanka என்ற தலைப்புடன் ஆறு பக்கங்களில் இப்பிரசுரம் புலிகளின் இலச்சினையுடன் அதன் அரசியற் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

போராட்டத்தின்வரலாற்றுப் பின்னணி தேசியஒடுக்குமுறையின் கொடுமைகள், ஐந்து இலட்சம் தமிழர் நாடற்றவராக இருப்பது, தமிழீழ பிரதேசங்கள்திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தினால் பறிக்கப்படுதல், மொழி, தொழில்வாய்ப்பு கல்வித்துறையில் இனப்பாரபட்சங்கள், தமிழர்களின் பொருளாதார ஒழிப்புஇனக்கலவரங்களும் தமிழினப்படுகொலைகளும் இணைப்பாட்சி கோரி நடந்த அமைதிவழிப் போராட்டங்களும் அவை முறியடிக்கப்பட்டமையும், தமிழீழவிடுதலைத்தீர்மானம் உருவான காரணம் விடுதலைப் புலிகளின் கருவிப் போராட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமைகள் ஆகியவை பற்றி இந்த ஆறுபக்கப் பிரசுரத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் மனச்சாட்சி சிறீலங்காவைக் காறியுமிழ வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக வழியில், அமைதிப் போராட்டங்களும், அஹிம்சைப் போராட்டங்களும் சிறீலங்கா அரசினால் அலட்சியப்படுத்தப்பட்ட காரணமே தமமை புரட்சி வழியை நாடும்படி செய்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் உத்தேச தமிழீழ நாட்டெல்லைகளைக் குறிப்பிட்டுக் காட்டும்வரைபடமும் சிங்களக் குடியேற்றத்தினால் பறிபோன தமிழ் ஈழப் பகுதிகளை அடையாளம் காட்டும்வரை படமும்இடம் பெற்றுள்ளன.

இப்பிரசுரத்தின் இறுதியில் பின்வருமாறுகூறுகிறது.

## அணிசேரா நாடுகளுக்கு வேண்டுகோள்!

"எமது தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படும் ஒருநாடு ஒடுக்குமுறையாளரை எதிர்த்துப் போராடும் தன்மை கொண்டதால் அது சர்வதேசியப் போராட்டத்தின் பிரிக்க முடியாதஓர் அம்சமாகும். எமது போராட்டம் பிற்போக்கு சர்வாதிகார சக்திகளுக்கும் நவீன காலனித்துவம்,சியோனிசம், இனவாதம்ஆகியவற்றுக்கும் எதிரானபோராட்டமாகும்; ஒவ்வொருவிடுதலைபோராட்டத்துக்கும் தமதுசுயமானவரலாற்று பின்னணியும்வேறுபட்ட நிலைமைகளும் காணப்படினும்எல்லாவிதமான அடக்குமுறைகளிலிருந்தும்சுரண்டல்களிலிருந்தும் மீட்சிபெறும் அடிப்படை மனித அபிலாஷைகளே இப்போராட்டங்களின் அச்சாணியாக அமைவதன்மூலம்வரலாற்றுரீதியாக அணைத்துலக நாடுகளின் கவனத்தை இணைவசீக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டமும் பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் அல்லது நமீபிய விடுதலைப் போராட்டம் அல்லது உலகில் ஒடுக்குமுறைக்காளாகும் எந்தஒரு நாட்டுமக்களும்தமதுதேசிய சுயநிர்ணயஉரிமையின்அடிப்படையில் நடத்திவரும்போராட்டங்களோடு ஒப்பிடக்கூடியதொன்றே.

"எனவே அணிசேரா மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்தும் இந்தியஅரசுக்கும். மூன்றாவது மண்டல நாடுகளின் தலைவர்கட்கும் நாம் விடுக்கும் விண்ணப்பம் யாதெனில் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்துக்கு மனித சுதந்திரத்தின் பெயராலும் மனித நீதியின் பெயராலும் அனுதாபமும் ஆதரவும்தருமாறும்சிறீலங்கா அரசின் இனக்கொலை ஒடுக்குமுறைகளைக்கண்டிக்குமாறும் எமது தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

"விடுதலைப் புலிகளாகிய நாம் உலகில் ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் புரட்சிகர சக்திகளுக்குஎமது ஒருமைப்பாட்டையும் ஆதரவையும் தெரிவிக்கிறோம்."

இவ்வாறு அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

சிறீலங்கா சனாதிபதி செயவர்த்தனவிற்கு தமிழகம் அன்றும்; இன்றும்; என்றும் அளிக்கும் வரவேற்பு இதுதான்.

ஈழத் தமிழர்களைக் கொடுமைப் படுத்தும்

# செயவர்த்தனவே திரும்பிப்போ!

# J.R. JAYAVARTHANE FASCIST GO HOME

- தமிழியக்கப் பாசறை சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசியத்தின் பக்கம் தமிழ் மக்களின் கவனம் திரும்ப வேண்டும்

தமிழீழ விடுதலைப் போராட்டம் உக்கிரகட்டத்தை அடைந்துவரும் இந்த வேளையில் விடுதலை பற்றிய தமிழ்மக்களின் சிந்தனைகளையும் கண்ணோட்டங்களையும் நாம் சற்று உற்றுநோக்க வேண்டியது அவசியமாகிறது. விடுதலைவேட்கை நிறைந்தவர்களாக தமிழர்களில் பலரிருந்தபோதும் அவர்களில் பலர் சரியான வழிநடத்தலில்லாத காரணத்தால் விடுதலை பற்றிய பரந்த சிந்தனையின்மையும் சர்வதேசியத்தில் மிகக்குறைந்த அறிவும் உடையவர்களாக இருக்கிறார்கள். இதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு. முதலாவது இதுவரைகாலமும் தமிழ் மக்களை தலைமைதாங்கி வழிநடத்திச்சென்ற தலைமைகள் தமிழ்மக்களை சர்வதேசியத்திலிருந்து பிரித்து வைத்தது. அடுத்தது ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டங்களைப் பற்றியோ அன்றி முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்குவாரத்தைப் பற்றியோ அன்றி விடுதலையின் அவசியத்தைப் பற்றியோ மக்களுக்கு போதுமான அறிவைத் தரும் பணியை தமிழ்ச் செய்தித்தாள்களோ அன்றி சஞ்சிகைகளோ செய்யவில்லை. அரசியல் தலைமைகளும், செய்தித்தாள்களும் தமிழ்மக்களுக்கு எதிராகச் செய்த இத் துரோகத்திற்கான காரணத்தை முதலில் பார்ப்போம்.

தமிழ்மக்களை இவ்வளவு காலமும் தலைமைதாங்கி வழிநடத்தி வந்த தலைமைகளும் இயக்கங்களும் சர்வதேசிய விடயங்களிலும் விடுதலைப் போராட்டங்களிலும் தமிழ்மக்களை பங்குபற்றச் செய்யாமல் மக்களை மயக்க நிலையில் வைத்திருந்தமைக்குக் காரணம் இவ்வியக்கங்களும் தலைமைகளும் முற்றுமுழுதாக முதலாளித்துவத்தைச் சார்ந்தவை. தேர்தல்களையும் அவற்றின்மூலம் கிடைக்கும் பாராளுமன்றப் பதவிகளையுமே இலட்சியங்களாகக் கொண்டவை. மக்கள் சர்வதேசியத்தைப் புரிந்து கொண்டால்... ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைப்போராட்டங்களின் வரலாறுகளை அறிந்துகொண்டால் ... அவர்கள் முதலாளித்துவத்திற்கு எதிராக கிளர்ந்து எழுந்து விடுவார்கள். தம்மைச் சுரண்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற முறையினை தகர்த்துவிடுவார்கள் இதன் காரணமாய் தாம் அனுபவித்துவந்த சுகபோக வாழ்க்கைகளை இழந்துவிடவேண்டி வரும் என்ற அச்சமே தமிழ்மக்களை சர்வதேசியத்திலிருந்து பிரித்துவைக்க இவர்களைத் தூண்டியது.

உதாரணமாக 1981 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பார்ப்போம். இத் தேர்தலில் மக்களின் எதிர்ப்புக்கிடையே தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குபற்றியது. இத் தேர்தல் பிரச்சாரத்தின்போது கூட்டணிச் செயலதிபரும் பிரமுகர்களும் அபிவிருத்திச் சபைகளால் தமிழர்களுக்கு விளையப்போகும் நன்மைகள் பற்றியும், அவற்றை கூட்டணி கைப்பற்றவேண்டிய அவசியம் பற்றியும் ஊரெல்லாம் மேடைபோட்டு வெட்டி முழங்கினர். இச் சபைகளின் மூலம் தமிழீழத்தை [illegible] உச்சக் கட்டத்திற்கு கொண்டுவந்து விடலாம் என்றனர். ஆனால் உண்மைநிலை என்ன ? எழுபதுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப் பகுதியில் குறிப்பாக 1980 இல் முதலாளித்துவம் தள்ளாடஆரம்பித்து விட்டதும், உலகப்பொருளாதாரம் சீர்குலையத் தொடங்கிவிட்டதும் கூட்டணிக்குத் தெரியும். வாங்கிய கடனுக்கு வட்டிகட்ட வழியில்லாமல் வங்குரோத்து நிலைக்குப் போய்விட்ட சிறீலங்கா அரசு தேவைப்பொருட்களை மக்களுக்கு வழங்கவே திண்டாடிக் கொண்டிருக்கிறது இந்த நிலையில் அபிவிருத்தி என்பது கனவில் கூடக்கைகூடாதென்பதும் கூட்டணிக்குத் தெரியும் ஆனல் இந்த உண்மைநிலை எதையும் அது மக்களுக்குத் தெரிவிக்கவில்லை. சர்வதேச அரசியல் அறிவு குறைந்தகாரணத்தால் மக்களுக்கும் இதைப் புரிந்துகொள்ளும் ஆற்றலிருக்கவில்லை. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களில் கூட்டணி பங்குபற்றக் கூடாது என்று எதிர்த்தவர்கள் கூட இவ்விடயத்தை மக்களுக்குத் தெரிவிக்கவில்லை. மக்களை மயக்க நிலையில்வைத்து அவர்களது வாக்குக்களைச் சூறையாடி ஒருசிலர் அனுபவிக்கும் இந்த உல்லாச வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து முதலாளித்துவத்தை அடியோடு அழிக்க வேண்டுமாயின் தமிழ் மக்கள் நிட்சயம் தமது கவனத்தை சர்வதேசியத்தின்பால் திருப்ப வேண்டும்.

அடுத்து தமிழ்ச் செய்தித்தாள்கள் இவ்விடயத்தில் தமிழ்மக்களுக்கு இழைத்த துரோகத்தைப் பார்ப்போம். ஈழத்தின் தமிழ்ச் செய்தித்தாள்கள் என்றே சிறீலங்கா அரசிற்கு அடகுவைக்கப்பட்டவை. தமிழ் முதலாளிகள் சிறீலங்கா அரசை திருப்திப்படுத்துவதற்காக இந்தச் செய்தித்தாள்களை நடத்திவருகின்றனர். தமிழ்மக்களுக்கு மாபெரும் வரலாற்றுத் துரோகங்களை இழைத்துவரும் இச் செய்தித்தாள்கள் என்றுமே விடுதலை பற்றிய உண்மைகளைப் பேசியதில்லை. தமிழீழ விடுதலைப்போராட்டம் தொடர்பாகவே குளறுபடி செய்கின்ற இவற்றிடம் நாம் சர்வதேச விடுதலை விடயங்களை எதிர்பார்ப்பது முட்டாள்த்தனம். அதுபோல வாரந்தோறும் புதிது புதிதாய் அவதாரம் எடுக்கும் தமிழக சஞ்சிகைகள் கூட தமிழ்மக்களின் கவனத்தை வாழ்க்கையின் உண்மைப்பிரச்சனைகளில் இருந்து திசைதிருப்பி சினிமா மாயையிலும் வெறும் கற்பனைக் கதைகளிலும் தமிழ்மக்களை மூழ்கச்செய்து வருகின்றன. தங்கள் விற்பனை ஒன்றை மாத்திரம்தான் இவை இலட்சியமாகக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் இவற்றினிடையே சற்று மாறுபட்டு தமிழீழத்தில் சுதந்திரன், சுடர் போன்றவையும், தமிழகத்தில் தென்மொழி, மர்மம் போன்றவையும் வெளிவந்தபோதும் இவை ஈழவிடுதலையையும் இனவிடுதலையையுமே குறிப்பாக வற்புறுத்தின. சர்வதேசியத்தை சரியான வகையில் இவற்றால் எட்ட முடியவில்லை. இவையெல்லாவற்றிலும் வேறுபட்டு "புதியபாதை" வெளிவந்தது. இதில் உலகரீதியான விடுதலைப் போராட்டங்கள் பற்றிய ஆக்கங்கள் இடம்பெற்ற அதேவேளையில் முதலாளித்துவத்தின் துரோகங்களும் அம்பலப்படுத்தப் பட்டன. தமிழ் இளைஞர்களின் அரசியல் பாதையில் 'புதியபாதை' ஒரு திருப்புமுனையாக இருந்தது. ஆனல் வருத்தத்திற்குரிய காரணத்தால் 'புதியபாதை' தடைப்பட்டது. இன்று மக்களுக்கு சர்வதேசியத்தைப் புரியவைக்கும் பணியை தர்க்கம், எண்ணம், பொதுமை போன்ற இதழ்கள் மட்டும் ஆற்றிவருகின்றன. ஆனலிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாது. இப்பணியில் பல்வேறுபட்ட வழிகளில் இயக்கங்களும் செய்தித்தாள்களும் ஈடுபடவேண்டும். ஏனெனில் ஏவுகணைகளை மையமாகக் கொண்டு உலக அரசியல் நிர்ணயிக்கப்படும் இந்தவேளையில் நாம் அம்புகளையும், வில்லுகளையும் பற்றி அலசிக்கொண்டிருக்க முடியாது. நியூக்கிளியர் (வெடிகுண்டு) பீதியில் உலகு மூழ்கிக் கொண்டிருக்கையில் நாம் இலக்கிய உலகில் மட்டும் வாழமுடியாது. முதலாளித்துவம் சர்வதேசரீதியாக முதுகொடிந்து நெருக்குவாரத்தில் அகப்பட்டு தவிப்பதை அறியாது அபிவிருத்திக் கனவுகளில் நாம் மூழ்கமுடியாது. நாளை வரப்போகும் பஞ்சத்தையும், பசியையும் அறியாது வெறும் சினிமா மாயையில் நாம் மூழ்கிவிட முடியாது.

இவையெல்லாவற்றையும் விட சோவியத்தின் அக்டோபர் புரட்சியை, சீனாவின் மக்கள் புரட்சியை அறிவதைவிடுத்து நாம் பிரயோசனமற்ற விடயங்களில் கவனத்தைச் செலுத்துவோமென்றால் அது தமிழினத்தை அழிவுப்பாதைக்குத்தான் இட்டுச் செல்லும். ஏனெனில் நாம் விடுதலைக்காகப் போராடும் இனம். எனவே நாம் எம்மை ஒத்துப் போராடும் இனங்களைப் பற்றி அறியவேண்டும். பின்னர் ஆதரவு கொடுக்க வேண்டும். இதன் மூலம்தான் நாம் எமது போராட்டத்திற்கு சர்வதேசரீதியான ஆதரவைத் திரட்டமுடியும். முதலாளித்துவத்திற்கு எதிரான முற்போக்கு சக்திகளை ஓரணியில் திரட்டமுடியும்.

அதுமாத்திரமல்ல ஏகாதிபத்தியத்திற்கு அடிகொடுத்து விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்லும் எல்சல்வதோரின் எஃப். எல். எம். என். னினையோ அன்றி பா. வி. இயக்கத்தினையோ அன்றி அயர்லாந்தின் ஐ. ஆர். ஏ. யினையோ அல்லது தென்னாபிரிக்க விடுதலை இயக்கத்தினையோ இன்னும் நாம் அறியாமல் இருப்போமென்றால் அது வருத்தத்திற்குரியது. இவற்றின் போராட்ட வரலாறுகளை அறியவேண்டியது உடனடி அவசியம். எனவே இனியாவது எம்மக்கள் சர்வதேசியத்தின் பக்கம் தமது பார்வையை திருப்பவேண்டும். தமிழ் இதழ்கள் மக்களுக்கு சர்வதேசியத்தை கொடுக்கும் சரியான அறிகருவிகள் ஆக மாறவேண்டும். விடுதலைப் பாதையின் தூரத்தைக் குறைத்து வேகத்தைக் கூட்டுவதற்கு மாத்திரமல்ல முற்போக்குச் சக்திகளை ஒன்றிணைப்பதற்கும் இது மிகவும் அவசியம்.

---

**அரசு - கூட்டணி பேச்சுவார்த்தைகளின் பயன் இதுதான்.. அமிரே அம்பலமாக்கிறார்.**

"....1977 ல் ஆட்சிக்கு வந்த ஐ. தே. க. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு என்ன செய்தது என எவராவது இங்கு இச்சபையில் எழுந்து விளக்கம் அளிக்க முடியுமா.... தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் இந்த அரசு மிகவும் மெதுவாக செயற்படுகிறது. அவர்களுக்கு பாதகம் செய்வதில் விரைவு காட்டுகிறது..... இரண்டு வருடமாக சனாதிபதியுடன் அமர்ந்து தேநீர் அருந்திப் பேசிவிட்டோம். ஒன்றும் பயனில்லை..."

- சிறிலங்கா பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் -

# இனிய ஈழத்தை விரைவில் அமைப்போம்!

"அகக்கண்ணற்ற அகங்காரிகள் அக்கிரமம் செய்வர்!
அரசினதிபர் கண்ணுற்று அலட்சியம் செய்வார்!
அகப்பட்ட அன்புச் செல்வங்களை அங்கமெல்லாம் அடிப்பர்!
அடிப்பவர்களின் அகக்கண் திறக்க ஒருநாள் அங்கணனும் அடிப்பான்!"

"ஆடகனின் ஆட்சியில் ஆர்ப்பரித்து ஆடுவர்!
ஆண்மையுள்ள சிங்கங்களை மதியிழந்து அடிப்பர்!
ஆசைகளை வெறுத்த வீரர்களை ஆதங்கம் செய்து மகிழ்வர்!
ஆதங்கம் செய்யும் அறிவிலிகளை ஒருநாள் அந்த ஆதவனுமெரிப்பான்!

"இடங்கரின் இரும்புகளுக்கு இனியும் இடங்கொடோம்!
இதயமற்ற அசுரரை அகற்ற இயந்திரம்போல் இயங்குவோம்!
ஈன்றுளின் இன்னல் தீர ஈசனை வேண்டி ஈடேற்றுவோம்!
ஈசுவரனின் துணையால் இனிய ஈழத்தை விரைவில் அமைப்போம்!"

* சிறீசண்முகேசுவரன் *

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

## ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசுக்கெதிரான புரட்சிப் போராட்டத்துக்கு உன் ஆதரவு அள்ளி வழங்கிடுவாய் தமிழினமே!

**பயங்கரவாததடைசட்டத்தைஎதிர்த்து**
**நீண்ட புரட்சிகர எழுச்சி யாத்திரை**

**புரட்சிகர யாத்திரைக்கு தேவை**

# 1 லட்சம்

எழுச்சிமிகு மக்களே
வாரி வழங்கிடுவீர்!

தங்கள் நிதியை கீழ்வரும்
முகவரிக்கு மணியோடர் மூலம்
அனுப்பிவைக்கவும்;

நிர்வாகச் செயலாளர்
ஈழ மாணவர் பொதுமன்றம்

**மு. டேவிட்சன்**
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வாசகர்களே!

பிரதி வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் நாம், "செந்தமிழ் இசை" எனும் தீந்தமிழ் நிகழ்ச்சியை, F.M. 98.2 mHz இல், மாலை 8½ முதல் 9½ மணி வரை உங்களுக்கு வழங்கிவருகின்றோம். எமக்கு இந்நிகழ்ச்சியை இயற்றப்ப ஆவன செய்வோர்

# Radio Soleil.

ஸ்தாபனத்தார்.

இல. 35, ரூ ஸ்டிபின்ஸன் - பரிஸ் 75018.
எமது பிரத்தியேக தொலைபேசி - (ஒலிபரப்பின் போது - மட்டும்) இலக்கம் 262-14-18.

"செந்தமிழோசை"யுடனான சகல தொடர்புகட்கும்

SENTAMILOSAI,
N° 8, RUE CHARLES MOUREU,
75013 - PARIS.
(Métro : TOLBIAC / PLACE D'ITALIE)


**********************************************

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ் முரசு' தன் யங்களிப்பைச் சிறப்புறச் செய்ய தமிழ் முரசை நெறிப்படுத் துங்கள். தமிழ்முரசுடனன சகல தொடர்புகளுக்கும்........

THE EDITOR, "TAMOUL MOURASSOU", 8, RUE CHARLES MOUREU,
PARIS - 75013, (FRANCE).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



n American adviser lectures a Salvadoran soldier.



எல்சல்வதோரின் அரச ஆயுதப்படையினர்க்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவப் பயிர்சியாளர் ஆயுதப்பயிற்சி அளிக்கும் காட்சியும், இப் பயிற்சிகளால் வெளியேற்றப்பட்ட இராணுவவெறியர்களின் கொலைப் பசிக்கு பலியாகிக் கிடக்கும் அப்பாவிக் குடிமகன் ஒருவனின உடலையும் படத்தில் காண்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளில் சல்வதோரில் அரச இராணுவத்தின் — கொடுமைக்கு... அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொலைவெறிக்குப் பலியான அப்பாவிக் குடிமக்களின் எண்ணிக்கை 35000 க்கும் மேல். இந்தக்கணக்கு முடிந்துவிடவில்லை, இன்னும் தொடருகிறது.

இலத்தீன் அமெரிக்காவின் சல்வதோராக இந்துசமுத்திரத்தில் இலங்கை மாறும் காலகட்டம் நெருங்கிவிட்டது. சிறீலங்காவின் முதலாளித்தவ அரசாங்கம் இலங்கையை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடகுவைக்கும் புனிதப்பணியின் வேகத்தை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. ஆயுதங்களை இறக்குமதிசெய்து எக்காரணமும் இன்றி தமிழ்மக்களைகொலைசெய்யவும்...கொடுமைப்படுத்தவும், சல்வதோர் அரசின் வழியில் தமிழீழ விடுதலைப்போராளிகட்கு எதிராக தறிகெட்ட சட்டங்களை இயற்றவும் ஆரம்பித்து விட்டது. நிட்சயம் இலங்கை ஒரு சல்வதோராக மாறும்நாள் வெகுதூரத்தில் இல்லை.

இந்நிலையில் சல்வதோரின் இடதுசாரி விடுதலைப் போராளிகளின் வழியில் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போரில் வெற்றிபெற வேண்டுமென தமிழீழ விடுதலைப் போராளிகள் விரும்பினால் முதலில் ஒன்றிணைந்து போராட்டத்தை ஒருமுனைப்படுத்த வேண்டும். இதுவே வெற்றிக்கு முதற்படி. விடுதலைக்கு விரைவு வழி.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

வெளியீடு

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org